248

# ஞானம் அடையும் வழி முறைகளும் ஆத்ம சிந்தனை விளக்கங்களும்

விநாயகர் தருமநிதிய நிறுவனரின்
சிந்தனைத் தொகுப்புகள்

இலவச வெளியீடு : உச 24

நிறுவனர்
**விநாயகர் தரும நிதியம்**
புலோலி மேற்கு, — பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

# ச ம ர் ப் ப ண ம்

இம் மாநிலம் உருவாகி அதில் உயிரினங்கள் உருவாக தங்கள் சக்தியை எந்நேரமும் உதவிக்கொண்டிருக்கும் ஐந்து பூதங்களான காற்று, தீ, நீர், நிலம், ஆகாயம் இவற்றிற்கும் எம்மை உருவாக்கிய தந்தை, தாய், குரு முதலானோருக்கும், நாம் வாழ உணவு அளித்துக்கொண்டிருக்கும் தாவர வர்க்கம் முதல் மனிதகுலம் வரையான சகல சீவராசிகட்கும் எமது வணக்கத்தைச் செலுத்தி இவர்கள் பாதார கமலங்கட்கு இந் நூலைச் ச ம ர் ப் ப ண ம் செய்வதில் பூரண ஆத்ம திருப்தி அடைகின்றோம்.

விநாயகர் தரும நிதியம் **நிறுவனர்**

---

தங்களை இருகரம் கூப்பி வேண்டுகிறோம்!

இந்நூல் தங்கள் கையில் கிடைத்ததும் குறைந்தது மூன்று முறை வாசியுங்கள். உங்களுக்கு இதில் புலன்செல்ல வாய்ப்பு இல்லாதுபோகில் கூடிய விரைவில் உங்கள் சிநேகிதரிடம் இந்நூலைக் கையளியுங்கள். இன்னும் வாசிக்க வேண்டிய மன எண்ணம் ஏற்படின் ஒன்பது முறை வாசித்த பின் அடுத்தவரிடம் ஒப்படையுங்கள். தங்கள் உதவிக்கு நன்றி.

புலோலி மேற்கு,
15-04-1992

நிறுவனர்
விநாயகர் தரும நிதியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

**1990**ஆம் வருடத்தில் நாம் **விநாயகர் தரும நிதியம்** என்னும் பொது நிறுவனத்தை ஆரம்பித்தோம். எமது சொந்த வாழ்க்கை வரலாறு எழுதி பூர்த்தியாகும்போது இதனை ஏன் ஆரம்பித்தோம் என்ற விடயம் தெரியவரலாம். இவ்விதமான நிறுவனத்தை ஆரம்பிக்குமாறு எமக்கு எவருமே ஆலோசனை கூறவில்லை. நாம் எவ்வித அதிகாரத்தையோ சொந்த இலாபங்களையோ, எவரது செல்வாக்கையுமோ விரும்பி இதை ஆரம்பிக்கவில்லை. இளமையிலிருந்து வளர்ந்த அறநெறிப் பண்பாடு காரணமாகவும், கடும் உடலுழைப்பால் பெற்ற அனுபவம் காரணமாகவும், உண்மைப் பொருளை கண்டுபிடித்தே ஆகவேண்டுமென்ற கடும் உணர்ச்சி காரணமாகவும், இந் நிறுவனத்தை ஆரம்பித்து, பல வெளியீடுகளையும் இலவசமாக வெளியிட்டு வருகிறோம், தற்சமயம் மாத சஞ்சிகையாகவும் உண்மையைக் கண்டுபிடிக்கும் முயற்சியை வெளியிட்டு வருகிறோம். இவ்விதமான நூல்களை இதுகாலவரையில் வேறு எந்த அமைப்புக்களோ தனி நபர்களோ வெளியிட்டதாக நாம் அறியவில்லை. நாம் வெளியிடும் நூல்களில் ஆன்மா உருவாகி ஞான ஒளியில் ஒன்றுசேரும் வரையிலான விளக்கங்களை எழுத முற்படும் போது ஐந்துபூத சேர்க்கை விகிதாசாரத்தைப்பற்றி அடிக்கடி எழுத வேண்டியுள்ளது, இச் சொல் ஏராளமாக வரவே செய்யும். ஓரளவு அனுபவம் மிக்கவர்களுக்குத்தான் இதைப்பற்றி உணரக்கூடியதாய் இருக்கும். வேறு எந்த சமயத்தைச் சார்ந்த நூல்களிலும் இவ்விதமான விளக்கங்கள் வெளிவருவதில்லை. உதாரணமாக சைவசமய நூல்களை எடுத்தால் புராண வரலாறுகளையும், நாயன்மார்கள் சரித்திரத்தையும் கடவுள்களின் சரித்திரத்தையும் திரும்பத்திரும்ப எழுதுகிறார்களே அன்றி வேறு எவ்விதமான புது ஆக்கங்களையோ தொழில் விருத்தி பற்றிய கருத்துக்களையோ தமிழ் மொழிச் சொற்களின் வரலாறுகள் பற்றியோ எழுதப்பெறுவதில்லை. இங்கே நாம் எடுத்துக்கொண்ட செயல் உண்மையான கடவுளை அறிந்தே தீரவேண்டுமெனவும், நாம் கண்டுபிடிக்கும் உண்மைகளை மக்களுக்கு தெரியப்படுத்தவேண்டுமெனவும் பொது ஆன்ம ஈடேற்றத்தைக் கருத்திற்கொண்டு செயற்பெறுகிறோம். ஆகவே எமது நூல்களில் வரும் ஐந்துபூதச் சேர்க்கை எனும் சொல்லானது உண்மையே கடவுள் என உணர்த்தவேண்டிய சொல்லாக அமைந்துள்ளது.

எமது வெளியீடுகளிலுள்ள சமர்ப்பணத்தின் மூலம் இவ்வுண்மைகளை நீங்கள் அறிந்துகொள்ள முடியும். கிறிஸ்தவ சமயமாக இருந்தாலென்ன, புத்தசமயமாக இருந்தாலென்ன, வேறு எச்சமயமாக இருந்தாலென்ன தங்கள் தங்கள் செயற்பாடுகளில் நடந்தவற்றையே திரும்பத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்ப எழுதிக்கொண்டிருக்கிறார்கள். சைவ சமயத்திலும் தேவார திருவாசகங்களையும், திருமுறைத் திரட்டுகளையும், புராணங்களையும் திரும்பத் திரும்ப ஒரே விதமாக எழுதுகிறார்களேயன்றி வேறு எவ்வித கடமை முன்னேற்றத்திற்குரிய கருத்துக்களை எழுதுவதாக இல்லை. பல்லாயிரம் வருடங்களுக்கு முன் நடந்ததாகச் சொல்லப்பெறும் பெருமைகளை திரும்பத் திரும்ப வெளிவேஷமான முறையில் எழுதுகிறார்களே அன்றி உள்ளத்தை நெறிப்படுத்தி ஆன்மா ஞான ஒளியில் நற்கதியடைவதற்குரிய கருத்துக்களை வெளியிடுவதில்லை. எண்ணம், சொல் செயல் மூன்றும் சரியாயமைந்தாலே ஆன்மா ஈடேற்றத்திற்கான ஐந்து பூத விகிதாசாரம் உருவாகமுடியும். பெரும்பாலான முறைகளிலும் ஓர் எண்ணத்தை எண்ணி அவ் எண்ணத்தை மக்கள் மனதில் கவர்ச்சிகொள்ளக்கூடிய வகையில் சொல்லவேண்டுமென நினைத்து நல்லமுறையில் கூறுகிறார்கள்.

இச்சொல்லை செயற்படுத்தும்போது சொல்லையும் செயலையும் மாறுபாடான முறையில் செயலாக்குகிறார்கள், சொல்லும், செயலும் மாறுபடும்போது இதனைப் பொய்யென அழைக்கின்றோம். மாறுபாடான சொல், செயல் காரணமாக உண்மையைக் கண்டுபிடிக்க முடியாதுள்ளது. ஆகவே ஐந்து பூத விகிதாசாரமென நாம் திரும்பத் திரும்ப எழுதுவதை தவறான கருத்தாகக்கொள்ளாது, எமது வெளியீடுகளை குறைந்தது 5 தரமாவது வாசித்து, உண்மையைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டு உங்கள் ஆன்மா நற்கதியடையும் வண்ணம் செயற்படுமாறு அன்புடனும் பண்புடனும் பணிவுடனும் இருகரம் கூப்பி வேண்டுகிறோம்.

ஐந்துபூத விகிதாசாரம் பற்றி விளங்கவைப்பதென்றால் முடியக்கூடிய காரியமல்ல. கடும் உடலுழைப்புள்ள சிலருக்கு ஐந்துபூத விகிதாசாரம் மாறுபட்டு அவரது அனுபவம் காரணமாக சிறிது காலத்திற்குள் இதைப்பற்றிய விளக்கத்தை அறிந்துகொள்ளமுடியும். வள்ளுவரது குறளிலே ''வஞ்சக மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்'' என்றும்,
பாரதியார் பாடலிலே ''புத்தம் புதிய கலைகள் பஞ்ச பூதச்செயல்களின் நுட்பங்கள் கூறும், மெத்த வளருது மேற்கே அந்த மேன்மைக் கலைகள் தமிழ்னில் இல்லை'' என்றும் திருவாயருளி உள்ளார்கள். ஆகவே பஞ்ச. பூத விகிதாசாரம் என்று நாம் சொல்லுவது, புதிய கருத்துக்கள் அல்ல

வள்ளுவரது கூற்றிலே கபட எண்ணமுள்ள ஒருவனது ஒழுக்கத்தைக் கண்டு அவனது உள்ளத்திலேயுள்ள ஐந்து பூதங்களும் நகைக்கின்றன என்கிறார். ஒருவனது மனதை வேறெவராலும் அறியமுடியாது. ஆனால் அவனது மனதிலுள்ள ஐந்து பூதங்களுக்கும் தெரியாமல் அவன் எந்த எண்ணத்தையும் எண்ணமுடியாது. ஆகவே இவனது மனம் ஐந்துபூத ஆட்சிக்குட்பட்டது என்பது முற்றிலும் உண்மையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிடப் பிறப்பின் நோக்கம்

"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு."

மாந்தர்தம் உள்ளத்தனைய துயர்வு எனும்போது ஏன் எமது மக்களுக்கு உயர்வு ஏற்படவில்லை? உள்ளம் தான் காரணம். ஆகவே உள்ளத்தை மாற்றியமைக்க வேண்டும். உள்ளம் மாறினால் மட்டுமே ஐந்துபூத விகிதாசாரம் மாறுதல் அடைகின்றது. உள்ளம் மாறாது போனால் பஞ்சபூத விகிதாசாரம் இருந்தபடியே அமைந்திருக்கும். உள்ளத்தில் நற்சிந்தனைகள் ஏற்படும்போது காற்று ஒளிப்பூத விகிதாசாரங்கள் உயர்நிலை அடைவதை எவரும் உணர்ந்து கொள்ள முடியும்.

கட்டுப்பாடற்ற சமுதாயத்தை வழி நடத்துவதற்கு கட்டுப்பாடற்ற சமூகத்துக்கு எந்தவிதத் தகுதியும் இல்லை. வழி நடத்துவோர், வழி நடத்தும் தகுதி பெற்றோர் வழி காட்டாது போனால் சமுதாயம் நெறிகெட்டுப் போய் விடும். வழி காட்டுவதற்கு வழி காட்டுவோர் தேவைப்படு கின்றனர். தகுதியுடைய ஒருவர் கைம்மாறு கருதாமல் வழி நடத்துவதை தம்முடைய கடமையாக மேற்கொள்ளு கிறார். வழிகாட்ட வேண்டும் என அவர்களை யாரும் வற்புறுத்துவது இல்லை. வழி காட்டினால் இன்ன பரிசு கிடைக்கும் என ஆசை வார்த்தை சொல்பவர்களும் இல்லை. அப்படியே சொன்னாலும் அவர்கள் ஏற்றுக்கொள் ளத் தயாராய் இல்லை.

பிரதிபயன் எதிர்பார்க்காமல் இயற்கை தன்னுடைய கடமையைச் செய்கிறது. அதுபோன்று பதில் உதவி எதையும் நினைத்துக்கூடப் பார்க்காமல் சான்றோர்கள் சமூகத்துக்கு வழி காட்டுகின்றனர். அப்படி வழிகாட்ட வேண்டும் என்னும் உள்ளுணர்வு அவர்களை உந்தித் தள்ளுகிறது. அந்த உந்து உணர்ச்சி காரணமாக அவர்கள் அற நெறி புகட்டுகிறார்கள்.

ஒவ்வோர் ஆண்மகனும் பெண்மகளும் எல்லா உயிர்க்கும் வந்திருக்கும் இப்பிறவியின் நோக்கத்தையும், பயனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் சிறிது ஆராய்ந்து பார்ப்பார்களானால் தாம் அறிவும் இன்பமும் பெறுவதில் வேட்கையுடையவராக இருத்தல் போலவே ஏனையவுயிா ஒவ்வொன்றும் வேட்கையுடைய வையாய் இருத்தலை எளிதில் அறிந்து கொள்ளலாம். நாம் அறிவும், இன்பமும் பெறுதல் பொருட்டு நமக்கு ஆகாத உயிர்களின் பிறவியை அழித்து விடுதல் எவ்வளவு தீய தென்பது நம்மைப் பிறர் அழிக்க வருங்காலன்றோ நடுக் கத்துடன் நமது உணர்வுக்குப் புலனாகின்றது. ஆகவே எந்த உயிரின் பிறவியையும் அழிக்காமல் நமது பிறவியின் பயனை நாம் அடைய முயலுதலே நமக்கும் பிறர்க்கும் அறிவையும், இன்பத்தையும் பெருகச் செய்வதற்கு ஏற்ற வழியாகும். அன்பும் அருளும் ஒருங்களாவிய அறவாழ்க் கையாகும் என்றுணர்ந்து கைக்கொண்ட பெருங் கொள் கையே தமிழ் மதத்திற்கு பேர் உறுப்பாய் விளங்குகின்ற தென்பது உணரற்பாலது.

## அறத்தின் தன்மைகள்

இன்றைய தமிழ் மக்கள் பார்ப்பனரைப் பார்த்து குல வேற்றுமை மிகுதியாய் பாராட்டி ஆடவரையும் மகளிரை யும் கட்டாய மணத்தில் புகுத்தி வருதலின் அதில் புகுந்த ஆண், பெண் பாலார் பெரும்பாலும் துன்ப வாழ்க்கையி லேயே உழன்று மாய்கின்றனர். ஒத்த அன்பில்லாத தம் வயிற்றிலிருந்து நற்குண நற்செய்கை வாயாத நோய் கொண்ட மக்களைப் பெற்று உலக வாழ்க்கைக்கே பெருந் தீமை விளைவிக்கின்றனர்.

தாம்பெற்ற புதல்வர்க்கு கல்வியறிவு புகட்டி அவர் அதுகொண்டு தமது வாழ்க்கைக்கு வேண்டும் பொருள் தேடிகொள்ளுமாறு செய்து பின் அவரை இல்லற வாழ்க் கையிலே நிலைப்பிக்கும் அவ்வளவே பெற்றோர் மக்கட்குச் செய்யக் கடமைப் பட்டுள்ளார்கள். பணத்தைத் தேடி வைக்கும் பெற்றோர் அவர்களுக்கு தீமையே செய்தவரா வார். தமது குடும்பச் செலவுக்கு மேற்பட்ட பொருளை வித்தியா விருத்திச் செயல்களுக்கு உதவியாகக் கொடுத்தல் வேண்டும். இக்காலத்தில் உணவளிக்கும் அறம் பயன் தரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையுடன் அறச்சோறு தின்பார் பல தீயசெயல்கள் புரியுமாறு அவரை ஏவுகின்றது. பிணிபட்ட ஏழைகட்டும் கல்வி பயிலும் ஏழை மாணவருக்கும், வறிய ஆசிரியருக்கும், நூல்கள் இயற்றும் நூலாசிரியர்கட்கும், துறவிகட்கும் உவந்து நல்குதலே உண்மையான அறமாகும்.

இயற்கைத் தாய் அமைத்துள்ள பஞ்சபூதச் சேர்க்கை விகிதாசார இயற்கை நியதியிலிருந்து மனிதன் பிசகுவானானால் அக்கணமே அதற்குரிய தண்டனை கிடைத்து விடுகிறது. பொய் சொல்லக்கூடாது என்பது இயற்கையின் திட்டம். அது மனிதன் போட்ட திட்டமன்று. பொய் சொல்லுகிற அக்கணமே பஞ்சபூதச் சேர்க்கை விகிதாசாரம் மாறானதும் மனச்சாட்சி கெட்டுப் போகின்றது. நாம் எப்பொழுதெல்லாம் மனச்சாட்சியை மீறி நடந்துகொள்கின்றோமோ அப்பொழுதெல்லாம் பஞ்சபூதச் சேர்க்கையில் மாறுதல் ஏற்பட்டு சீர்கேடு அடைகின்றோம். சீர்கேடு அடைவது நமக்குத் தெரியும். அது மற்றவர்களுக்குத் தெரியாது. உடல் அமைப்பில் முற்றும் வளர்ச்சியடைந்த அமைப்பு மனித அமைப்பாகும். மனிதப்பிறவியைப் பெற்ற பின் மனிதப் பிறவிக்கேற்ற கடமையை உணர்ந்து செய்யாமல் பஞ்சபூதச் சேர்க்கை விகிதாசாரத்தை மாறுபடும்படி செய்வானாகில் வாழ்க்கையை வீணாக்கியவனாகிறான்.

கலியுகத்திற்கு கருமமே சிறந்த அறமாகும். கருமத்தினால் பஞ்சபூதச் சேர்க்கை மாறுபடாமல் சித்தசுத்தி செய்து கொள்ளாதவர்கள் ஆன்ம ஞானத்தைப் பெற முடியாது. ஆகவே அறநெறி உணர்வை எல்லாக் குழந்தைகளுக்கும் புகுத்த வேண்டும். ஆபாசம் உள்ள சினிமாப் படங்களை, பாடல்களைத் தடை செய்ய வேண்டும். குழந்தைகள் அவற்றைக் கேட்க அனுமதிக்கக் கூடாது. பக்தி, வீரம், நீதிக் கருத்துடைய பாடல்களை இசையுடன் பாடச் செய்ய வேண்டும். நம் இதிகாச புராணங்களில் உள்ளவற்றை புரியுமளவு சிறு தமிழில் கூறவேண்டும். தனியார் நடத்தும் பாடசாலைகளில் ஓரளவு ஒழுங்கு கட்டுப்பாட்டைக் காண்கிறோம். அரசு நடத்தும் பாடசாலைகளில் ஒழுங்கு, கட்டுப்பாட்டைக் காண முடிவதில்லை. அரசு பாடசாலைகளில் ஆசிரியர்கள், மாணவர்கள் பொறுப்புணர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையுடன் செயல்படுவது குறைவு. அறநெறி உணர்வு கூடினால் அவர்களும் கடமை உணர்ந்து செயல்பட முடியும்.

## உண்மைக்கு மாறாய் நடவாதே

''அவுணர் குடிகெடுத்த ஐயா எம்மைக் காப்பாற்றுவதில் ஏன் இந்தத் தயக்கம்?'' இக் கேள்வியைத் திரும்பத் திரும்பச் சிந்திக்கவேண்டும். பொய்யுள்ள அவுணர்களைத் தண்டித்தாய் ஆகவே பொய் பேசுபவர்களைத் தண்டிக்கும் ஆற்றல் உனக்கேயுரியது. எம்மைக் காப்பாற்று என்று சொல்வதால் அதாவது நாமும் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். ஏன் அனுபவிக்கிறோம். இதை ஆராய நாம் விரும்பவில்லை. எம்மைக் காப்பாற்றுவதில் தயங்காதே என அலறுகிறோம். நல்லூர் சம்பவங்கள் தினசரி பத்திரிகைகளில் வெளியாகின்றன. கொடியேற்றத்தன்று 8 பெண்கள் சங்கிலி காணாமல் அதை அணிந்த பெண்கள் அடைந்த திடீர் மனமாற்றம். தேர்த் தினத்தன்று மூன்று தாலிக்கொடி, ஒன்பது சங்கிலி காணாமல் அப் பெண்கள் அடைந்த திடீர் மனமாற்றம், தீர்த்தத் தினத்தன்று இளைஞர்கள் தண்ணீர் வாரி இறைத்ததால் திடீரென இளம் பெண்கள் அடைந்த மனமாற்றம். நீர்வேலி அச்செழு அம்மன் கோவிலில் கும்பாபிஷேக எண்ணெய் சாத்தும் வைபவத்தில் பஞ்சபூதச்சேர்க்கை மாறுபட்டு இடம்பெற்ற திடீர் மாற்றம் இவைகளை அறிகிறோம். மூலகாரணத்தை ஆராய மறுக்கிறோம். தெரிசனம் செய்யப் போகும்போது இவ்விதம் நேரலாமென எண்ணவில்லை. இதற்கும் ஏதும் காரணமிருக்குமோ என ஆராய முயலவில்லை. இதேவிதமாகவே நெடுக நடக்க விரும்புகிறோமா? கலியுக தர்மம் கருமத்தில்தான் தங்கியுள்ளது. கலியுகக் கடவுள் ஞான முருகன் எனக் கதைக்கிறோம். ஞானவாழ்வு என்றால் என்ன என்பதைப்பற்றி சரியான விளக்கம் பெற முடியவில்லை. ஞானம் என்றால் வாழு வாழவிடு என்பதாகும். வாழு என்றால் உண்மையான உரிமைகளுடன் வாழு என்பதாகும். உண்மைக்கு மாறாய் நடவாதே என்பதாகும். வாழவிடு என்றால் மற்றைய எவ்வுயிர்க்கும் இடரில்லாமல் உண்மையாய் வாழ வழிவிடு என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது உடலின் முடிவு நீறான விபூதியே. ஆகவே நாம் என்னதான் தலைகீழாய் செயல்பட்டாலும் முடிவு இந்த நீறாகும் உண்மையே. நீறாகும் நாம் அகங்காரமின்றி நடப்பதற்காக ஒவ்வொரு கணமும் நினைப்பதற்காகவே திருநீறு பூசும் பழக்கத்தை முன்னோர்கள் ஏற்படுத்தி விபூதி வாங்கும்போதும் தரிக்கும்போதும் உண்மையை வணங்கும் வளக்கத்தை ஏற்படுத்தினார்கள். அத்துடன் விபூதியைப் பிரதானமாக சிரசாகிய அறிவுக் கங்கையுடைய நெற்றியிலே இடும் வழக்கத்தை பழக்கப்படுத்தினார்கள். சிரசிலேயுள்ள மூளைக்கு இத்திருநீற்றின் சக்தி சென்று உடலைப் பக்கு வப்படுத்தி உள்ளத்தையும் பக்குவப்படுத்துமென விரும்பி னார்கள். அன்றைய வாழ்க்கையில் உண்மைக்கு மாறாய் எள்ளளவும் செய்யமாட்டோம் என விரும்பி 'சிவ சிவ சிவ' என திருநீறு தரித்த நாம் சிலநொடியில் மாறான வகையில் செயல்படுகிறோம். ''சிவ—உண்மை'' இச் செயல்களிலான கதைகள் வார்த்தைகள் வாயில் வந்ததும் பஞ்சபூதச் சேர்க் கையை மாறுபடுத்தி எமது மூளையிலுள்ள ஆன்மாவில் பதி வாகின்றன. உண்மைக்குரிய குறியீட்டுப் புள்ளிகள் போல் பொய்க்குரிய குறியீட்டுப் புள்ளிகளும் சூக்கும ஆன்மாவில் உடனுக்குடன் பதிவாகின்றன. பஞ்சபூதச் சேர்க்கை விகி தாசாரம் மாறுபட அதற்குரிய பலன்களின்படியே எமது வாழ்க்கையின் பலாபலன்கள் அமைகின்றன. எந்த விதியை யும் நோவதில் பலனில்லை. இந்தப் பஞ்சபூதச் சேர்க்கை மாறுபட்டதால் விளையும் பலன்களை எந்த விஞ்ஞானத் தாலோ மந்திர தந்திரங்களாலோ மாற்ற முடியாது என் பதை உணரவேண்டும். நாங்கள் முன் நடந்த செயல்களை யோசிக்கும்போது முன்பதிவு செய்யப்பெற்ற நினைவுகள் உடன் வெளிவருகின்றன. முன் பதிவு இருப்பதால் எவ்வ ளவோ விசயங்கள் எம் ஆத்மாவில் பதியப்பட்டுள்ளன என்பது விளங்கும்.

பேய், முனி, பிசாசு இவை உலவுவதையும் சிலர் சொல் லக்கேட்டு அவ்வழியே எமது மன நிலையும் பயிற்றுவிக்கப் பெற்ற மன நிலையில் இருந்து வந்தோம். பலி காரணங் களால் எங்கள் கிராமங்களில் சச்சரவுகள் இருந்ததும் சாதிச் சண்டைகள் இருந்ததும் எமக்குத் தெரியும். ஆனால் இப் பலியை நிறுத்துவதற்கு எடுத்த முயற்சிகள் அறிவு விருத்தி அடையாத நிலையில் இன்றும் சில இடங்களில் அப்பலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடப்பதை அறியவருகிறோம், பேய், முனி, பிசாசு இவைகள் இன்று இருக்குமிடம் அறியமாட்டோம். பேய், முனி இரவு சாம வேளைகளில் பிரயாணம் செய்த கதைகளையும் அவைகள் இருக்கும் மரங்களையும் கூறக்கேட்டு அச்சமடைந்து இறந்துபோனவர்களையும் நன்றாய் அறிந்திருந்தோம். ஆனால் தற்சமயம் இக்கருத்துக்கள் எவருக்கும் மிகமிகப் பெரிய அறிவீனம் என்பது நன்றாய் விளங்குகிறது. பலி கொடுக்கும் பழக்கமும் மிகவும் பெரிய அறிவீனம் என்பது வரும் கிட்டிய காலங்களில் முற்றாக விளங்கி அச்செயல் அற்றுப் போய்விடும். ஆகவே அறிவு என்பதற்கு எல்லையில்லை. எமக்குத் தெரியும் அறிவு மிகவும் சொற்பமே. ஏன்? எப்படி? என்ற கேள்வியை எழுப்புவதின் மூலம் அறிவு விருத்தியடைகிறது. அறிவைக் குறுக்கு வழியில் லாபமடையச் செயல்படுத்துவதால ஐந்துபூதச் சேர்க்கை விகிதாசாரம் மாறுபட்டு முன்னோர்களின் முதுமொழிகள் மீறப் பெறுகின்றன. அதற்குரிய பலன்களை அனுபவிக்கிறோம். முன்னோர்கள் வகுத்துவைத்த கருத்துக்களைத் தவறான பாதையில் பாவிக்கிறோம். சமய நெறிகள், சோதிடக் கருத்துக்கள் முழுவதும் முற்றும் துறந்த முனிவர்களாலும் நாயன்மார்களாலும், ரிசிகளாலும் வகுக்கப் பெற்றுள்ளன. இவை தேவ வாக்குகள் ஆகும். இவை தெய்வப் பண்பு நிலைக்குரிய ஐந்துபூதச் சேர்க்கையை உண்டாக்குகின்றன. இவற்றின் கருத்துக்களை மறைபொருளாய் வைத்து சுய நலத்துக்கு பயன்படுத்துவோரையே மிகுதியாகக் காணுகிறோம். உட்பொருளை விளங்கிக்கொள்ள காலங் காணாமையினால் சுயநலவாதிகளின் கருத்துக்களை முழுதாக ஏற்று குறுக்கு வழியில் லாபமடையும் வழிகளை வகுத்து வருகிறோம்.

## அஞ்ஞானம் அகல வேண்டும்

இற்றைக்கு சுமார் 50 வருடங்களின் முன் 1940 காலங்களில் உள்ள அறிவுக்கும் இன்றைய அறிவுக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் உண்டு. அதற்கும் முன்னைய காலங்களில் மக்கள் மிகவும் அறிவீன நிலையில் இருந்துள்ளதாக நாங்கள் கருதுகிறோம். அக்காலங்களில் மக்கள் அச்சம் காரணமாகவும், அகங்காரம் காரணமாகவும் மனித மங்கையர்களைக் கடவுளுக்கு பலி கொடுத்து வந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலஞ் செல்லச்செல்ல அறிவு கூட அப்பழக்கம் சமயக் கொள்கைக்கு முரணானது எனக் கருதி ஒருசிலர் கைவிட்டதும் மற்றையோரும் அப் பழக்கத்தைக் கைவிட்டனர். இன்றும் இருண்ட கண்டங்களில் அப்படி இருப்பதாக அறிகிறோம். இக்காலம் நீங்க மக்கள் ஆடு, மாடு, கோழிகளைப் பலி கொடுக்க முற்பட்டார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் இவை பலி கொடுக்கும் பல கோயில்கள் இருந்ததை எங்கள் காலத்தில் கண்ணாரக் கண்டோம்.

மனதின் தொழிலாகிய எண்ணத்துக்கு இந்திரியங்களின் தொழிலைவிட அதிக வியாபகமுண்டு. அதனிலும் பெரியது புத்தி. மனது சந்தேகம் கொள்கிறது. புத்தியோ மெய்ப்பொருளை நிச்சயிக்கிறது. ஆகையால் அது பெரியது. புத்திக்கும் எட்டாதது ஆன்மா. ஆசையானது இந்திரியங்களையும் மனதையும் புத்தியையும் பற்றி நிற்கும்போது துன்பமே அதிகரிக்கிறது. ஒவ்வோர் இன்பமும் இறுதியில் துன்பமாகப் பரிணமிப்பதை அவர்கள் நாளடைவில் அறிவார்கள். களை எடுத்தலும் நல்ல செடிகளுக்கு உரம் போடுதலும் சேர்ந்து அமைவது சிறந்த கிருஷிகமாகும். உலகில் மனிதனுக்குரிய ஐந்துபூதச் சேர்க்கை வித்தியாசயாசமடைந்து கெட்டவர்களுடைய கூட்டம் பெருகிவிட்டால் அவர்களுக்கிடையில் தர்மம் தலையெடுக்காது.

ஈசுவரனுக்கு அர்ப்பணம் பண்ணிய கருமம் பிறவியை உண்டு பண்ணாது. மனைவி, மக்கள், பொன், பொருள் இவைகளுக்காக மக்கள் குடம் குடமாகக் கண்ணீர் சிந்துகின்றனர். ஆனால் ஞானம் வேண்டும்; அருள் வேண்டும்; உண்மை வேண்டும் என்று அழுபவர் யார்? நீ வாங்கிப் பிழைப்பவனாக வாழாது பெருங்கொடையாளியாயிரு. உன் கொடையை ஏற்றுக்கொள்பவர்களை எல்லாம் கர்வம் வராமல் இருப்பதற்காக இறைவன் சொரூபமாகக் கருதி நமஸ்காரம் செய். தெய்வத்தின் சகாயமும் மனிதனுடைய நேர்மையான முயற்சியும் ஒன்றுசேர்ந்திருக்க வேண்டும். மனிதனுக்கு வேண்டியதை எல்லாம் தெய்வம் செய்து வைக்கும் என்று முயற்சியையெல்லாம் நிறுத்திவிடலாகாது. கடவுளைச் சார்ந்திருந்து தன் கடமையைக் கடவுள் பொருட்டு முழுமனதுடன் செய்ய வேண்டும். நல்ல முயற்சியுடையவனுக்கு செல்வமும் சீரும் சிறப்பும் வளரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமொன்று எண்ண மொழி ஒன்று பேச இவ்விரண்டுக்கும் மாறான ஒன்றை மெய் செய்ய மனிதனது ஆற்றல் சிதறலடைகிறது. முற்றிலும் பொருந்தி ஒன்றுபட்டிருப்பவன் பேசுவது நிறைமொழி. ஆற்றுவது செயற்கரிய செயலாம். இது வாழ்க்கை சம்பந்தமான பேருண்மை. விருப்பும் வெறுப்பும்தான் மனிதனைக் கருமத்தில் கட்டுப்படுத்துகின்றன. கருமத்தில் அல்லது கரும பலனில் பற்றில்லாது செய்யும்பொழுது பழைய கன்மம் குறைகிறது. புதியது ஒன்றும் சேர்க்கப்படுவதில்லை. இந்த மனநிலை முக்திக்கு மார்க்கமாகிறது. மனதை ஒருமுகப்படுத்துதல் உலக காரியத்துக்கும் பயன்படும். முதலில் மனம் ஒருமுகப்படுமளவு அதற்கு வல்லமை வருகிறது. விரித்தோடும் சூரிய கிரணங்களை பூதக்கண்ணாடி மூலம் குவியச்செய்தால் ஒளியும் வெப்பமும் அதிகரித்து ஒரு செத்தையில் தீ மூட்டுதலும் முடியும். அங்ஙனம் மனது குவியும்பொழுது ஐந்துபூதச் சேர்க்கை வித்தியாசமடைந்து எதை எண்ணுகிறதோ அதன் பாவனையை விரைவில் எடுத்துச் செயலும் திறம்பட்டதாகிறது.

கீழ் மக்களும் விரைவில் மேன்மக்கள் ஆவதற்கு வழியுண்டு. எண்ணமே பெருமைக்கும் சிறுமைக்கும் முதற்காரணம். இடையறாது இறைவனைப் பக்திபண்ண வேண்டும் என்ற எண்ணம் வலுக்கும்போது முன்னைய பாவச் செயல்களைப் பற்றிய எண்ணங்கள் அடிபடுகின்றன. நற்செயலுக்கும் நல்லியல்புக்கும் வித்தானது நல்லெண்ணம். இடையறாது உண்மையை நேசிக்க தீர்மானம் செய்கிற அளவில் கேடுடைய ஒருவன் சாதுவாகிறான். சிறப்பு வருமாதலால் அவன் நன்கு தீர்மானித்தவன் ஆகிறான்.

முற்பிறப்பில் மனிதன் செய்த முயற்சி வீண் போவதில்லை. தேவ இயல்பு சம்சார பந்தத்திலிருந்து விடுபடுவதற்கு ஏதுவாகிறது. அசுர இயல்பு பந்தத்தைப் பலப்படுத்துகிறது. ஒரு சென்மத்தில் அடைந்த பயிற்சி அடுத்த சென்மத்தில் அந்த சீவனது இயல்பாக அவனிடத்து அமைகிறது. அசுர இயல்புடையார் முக்கரணங்களையும் முறை தவறிக் கையாளுகின்றனர். மரணத்தோடு அவர்களுடைய ஆசை முடிவு பெறுவதாக மற்றவர்களுக்குத் தென்படுகிறது. ஆனால் திரும்பப் பிறக்கும்பொழுது அதே ஆசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றத்துக்கு வருகிறது. அது பூர்த்திபண்ண முடியாத ஆசையாகிறது. இக்காலத்தில் பலர் கோயில் கட்டுவதும், விழாக் கொண்டாடுவதும். ஆராதனை—அபிஷேகங்கள் செய்வதும் இத்தகைய இயல்புகளுடையவைகளாகின்றன. விளம்பரப்படுத்திக் கொள்வதே அவர்களின் கருத்தாகும். கடவுளின் பெருமைக்கென்றே தொண்டாற்றுவது தெய்வ சம்பத்துடையவர்களின் இயல்பு. அசுர இயல்புடையார் தங்கட்கு வாய்த்த பலத்தையெல்லாம் மற்றவர்களைச் சிறுமைப்படுத்துவதிலே உபயோகிக்கின்றனர். இறுமாப்பு ஒருவனை நெறி பிறழ்ந்து போகும்படி தூண்டுகிறது. மலையுச்சியிலிருந்து கீழே உருண்டுவரும் கல் பள்ளத்தாக்கு வரையில் விரைவதுபோன்று அசுரன் ஒருவன் புல்லிய நிலையில் எல்லை காணும் வரையில் கீழ்மையுறுகிறான். கெட்டவன் ஒருவன் திரும்பி மேல் நோக்கிப்போக ஆரம்பித்து விட்டால் அவன் அதிவிரைவில் முன்னேற்றமடைந்து விடுகிறான்.

## பகுத்தறிவின் விளைவு

உலகிலேயுள்ள உயிர்கள் ஐந்துபூதச் சேர்க்கை விகிதாசாரம் கூடிக்குறைதல் காரணமாக வெவ்வேறு இயல்புகளை உடையன. ஒவ்வொரு உயிரின் ஆத்மாவிலும் வினைப் பயன் புள்ளிகள் வெவ்வேறாக அமைந்திருக்கும். ஒன்று போல் மற்றொன்று இருக்க முடியாது. கருத்துக்களும் ஒன்றுபோல் மற்றொன்றுக்கு இருக்கமாட்டாது. ஆனால் 1, 2, 3, 4, 5 அறிவுள்ள உயிரினங்கள் எல்லாம் சுகத்தை விரும்புவது கிடையாது. அவை அவைக்குத் தேவையானவற்றை அவை அவை தொழில் செய்தே பெறுகின்றன. மரம் முதற்கொண்டு மிருகம் ஈறான அனைத்து உயிரினங்களும் செயல்பட்டே தங்கள் காரியத்தைக் கழிக்கின்றன. மரங்கள் செயல்பட்டு மற்றைய உயிரினங்கட்கு சேவை செய்கின்றன. அதேபோல் மற்றைய உயிரினங்களும் செயல் பட்டு ஒன்றுக்கொன்று சேவையாற்றுகின்றன. ஆனால் நாகரிகம் அடைந்த மனிதன் சுகவாழ்வை விரும்பி எத்தனையோ தந்திரங்களைக் கையாளுகின்றான். மனிதனுக்குக் கொடுக்கப்பெற்ற 6வது பகுத்தறிவை சகல உயிரினங்களையும் அடக்கி ஆள முற்படுத்துகிறான். இங்கு மனித வர்க்கத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையும் அடக்கி ஆள முற்பட்டு தீவினையை வளர்த்துக் கொள்ளுகின்றான். குடும்ப வேற்றுமை முதல் வேற்றுமை வளர வளர இடவேற்றுமை, இனவேற்றுமை, சாதி வேற்றுமை, கிராம வேற்றுமை, நகரவேற்றுமை, மாவட்டவேற்றுமை, மாகாண வேற்றுமை, தேசவேற்றுமை என பரந்தளவில் வேற்றுமைப்படுவதைக் காண்கிறோம். உண்மைப் பொருளின் இயல்பை அறியாமல் வேற்றுமையை வளர்க்கிறோம். எந்த உயிரினமும் செயல்படாமல் (தொழில்படாமல்) வாழ முடியாது. செயல்படாமல் வாழ்வதற்கு உரிமையும் கிடையாது. மனிதன் சுகவாழ்வு என்பதற்கு சரியான விளக்கம் தெரியாமல் அலைகிறான். இக் காரணங்களால் வீண் பிரச்சினைகளை ஏற்படுத்தி அப்பிரச்சினைகளைத் தீர்க்கும் வழி தெரியாமல் மென்மேலும் பிரச்சனைகளைத் தோற்றுவிக்கிறான்.

**உண்மையின் இரகசியம்**

ஒளியைப் படைக்காமல் பிரபஞ்சத்தை இறைவனால் படைக்க முடியவில்லை. உண்மை என்ற ஒன்றே முதலில் இப் பிரபஞ்சத்தில் இருந்திருக்க வேண்டும். வேறு ஒன்றுமில்லாத இப் பிரபஞ்சத்தில் உண்மையால் எவ்வாறு ஒளியைப் படைத்திருக்க முடிந்தது என்ற வினா எம்முள் எழவே செய்யும். தன்னிலிருந்து ஒளியைப் படைக்காமல் வேறு எவ்வழியில் உண்மையால் ஒளியைப் படைத்திருக்க முடியும் என எம்முள் சந்தேகம் எழுவது இயற்கையே. சிலந்தி தனதுடலில் இருந்தே கூடுகட்டுவது போலவே உண்மையும் தன்னுள் இருந்தே ஒளியைப் படைத்திருக்க வேண்டும். இதிலிருந்து ஒளியானது உண்மையிலிருந்தும் பிரித்துப் பார்க்க முடியாத ஒன்று எனத் தெரிகிறது. சுருங்கக்கூறின் ஒளியே உண்மை - கடவுள்.

எமது உண்மை அல்லாத பேச்சுக்களின் ஒலி அலைகள் காற்றை மாற்றமடையச் செய்கின்றன. காற்று நெருப்பையும், நெருப்பு நீரையும், நீர் பூமியையும், பூமி எமது உணவுகளையும், உணவுகள் எமது மன நிலைகளையும் மாற்றமடையச் செய்து வரும் சந்ததியினருக்கு வீண் பிரச்சினைகளை உண்டாக்குகின்றன.

எமது முன்னோர்கள் முனிவர்கள்-முட்டாள்கள் அல்லர். இன்று விஞ்ஞானம் வளர்ந்துள்ளதா-அர்த்தமுள்ள கேள்வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. Daniel
PRINCIPAL
KARAVEDDY

திருவிழா, விரதங்கள், தபஜெபம் நிகழும் இடங்கள் இன்று களியாட்டம் நிகழும் இடங்களாய் மாறியுள்ளன.

நோய் மாற்றும் மருந்துகள் புதுப்புது நோய்களை மாற்றப்படுகின்றன. ஆஸ்பத்திரிகள் புது நோய்களைத் தரும் ஆஸ்பத்திரிகளாக மாறியுள்ளன.

நன்மையும் தீமையும் கலந்து நிற்கும் இந்த உலகத்தின் இரகசியத்தை யார் அறிவார். ஒன்றும் பயனில்லை என்று நிராசைப்படுவதும் தவறு. எல்லாம் தாமாகவே சீர்பட்டு விடும் என்றிருப்பதும் தவறு. கொலையும், பாவமும், ஆணவமும் அதிகம் இருக்கின்றன. ஆனால் அன்பும் அனுதாபமும், அறமும் தெய்வபக்தியும் மிகுந்த அளவிலேயே இருக்கின்றன. இன்று நிகழும் நிகழ்ச்சிகள் பெருங்கடலில் சிறு அலைகள்போல் நடைபெறுகின்றன. இவற்றைக்கண்டு தயங்கவேண்டியதில்லை. மனித உள்ளத்தில் தைரியம் இருக்கிறது. வீரம் இருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும் நாம் விமோசனம் இல்லையென ஏன் எண்ணவேண்டும்? உலக வரலாற்றில் நல்ல கட்டங்களும் உண்டு. துக்க கட்டங்களும் உண்டு. இப்போது நாம் துக்க கட்டத்தில் இருக்கிறோம். ஒவ்வொருவரும் நம்முடைய கடமையை நினைவில் வைத்து அறிவிலிகளின் அபவாதத்திற்கு அஞ்சாமல் நடந்து கொண்டோமானால் இந்தத் துக்கக் கட்டம் சீக்கிரமாகத் தீரும். முயற்சியில் கஷ்டமுண்டு. ஆயினும் பயனும் உண்டு. உறுதியை இழக்காமல் அறிவின் துணைகொண்டு உண்மையை உணர்ந்து கடமையைச் செய்வோமாக.

சாந்தி விரும்பினாயானால் பல சங்கற்பங்கள் செய்யாதே என்றார் ஒரு முனிவர். செய்யவேண்டியதை நன்னெறியில் செய்வதே சாந்தியைத் தரும். நமது பேச்சுக்களிலும் செயல்களிலும் பத்தில் ஒன்பது பங்கு யாருக்கும் வேண்டாதவை. அவற்றை நீக்கினால் கவலையும் மனக் கசப்பும் நீங்கும். காலம் வீணாகாது. செயல் சிக்கனத்தோடு எண்ணங்களையும் சிக்கனப்படுத்து. உன் பேச்சுக்களில் தைரியமும் சத்தியமும் பொருந்தியிருக்க வேண்டும். ஒவ்வொருவன் உள்ளத்திலும் தருமத்தைப் பற்றிநிற்கும் தெய்வம் ஒன்றுண்டு. அதை நம்பி செயல்படுபவனுக்கு வளமும் வேண்டாம். சுற்றமும் வேண்டாம் புகழும் வேண்டாம். ஞானவாழ்வு நடத்திவருபவனுக்கு மரணம் எப்ப வரினும் ஒன்றே. சந்தோஷமாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் நீப்பான். பிறர் செயலும் சொல்லும் என்னவென்று கவலைப்படாமல் கடமையைக் கருதி வாழ்வான். தன் செயலையும் சொல்லையும் எண்ணத்தையும் பிழையறக் காப்பான். தரும வழியில் நில்லாத மற்றவர்களின் ஒப்புதலையும் பாராட்டையும் நாடமாட்டான். உனக்கு உள்ள காலம் குறைவு. அதை வீணாக்காதே. ஒவ்வொருவன் உள்ளத்திலும் குடிகொண்டிருக்கும் தெய்வத்தன்மையுடைய ஆத்மாவுக்கு தீங்கு நேரிடாமல் பாதுகாப்பாய். சுகம் துக்கத்திற்கு மேலாக ஆத்மாவை நிறுத்தி வைப்பதே ஞானமாகும். தனக்கு மற்றொருவன் இது செய்யவேண்டும். இது செய்யாமல் இருக்கவேண்டும் என்று எதிர்பாராமல் இருப்பதே ஞானம். பயனில்லாச் செயல், மோசம், கபடம் இவைகளைச் செய்யாதிருத்தலே ஞானம். எந்தச் சிறிய காரியத்தையும் மனதில் நிலைகொண்ட தருமத்தின்படி செய்ய வேண்டும்.

எல்லாப் பொருள்களும் உருவம் மாறி வருவதும் சிதைவு படுவதும் இயல்பாகும். இதுதான் உலகத்திற்கு உயிராகும். இந்தத் தத்துவத்தைக் கொண்டு உன் வாழ்க்கையை நடத்தவேண்டும். புத்தகப் படிப்பைத் தள்ளு. அது உதவாது. மரணத் தறுவாயில் கற்றதும் கேட்டதும் திருப்தி அளியாது. அடைந்த சுகத்திற்கு உண்மையில் நன்றியுள்ளவனானால் துன்பங்களையும் இன்றியமையாத நிகழ்ச்சிகள் என உணர்ந்து சாந்த சிந்தையுடன் உயிர் விடவேண்டும். சகலமும் தெய்வாதீனமே. அதற்கு மாறாக ஓர் அணுவும் அசையாது. தெய்வத்தை நம்பி எஞ்சியுள்ள நாட்களை முடித்துக்கொள். நீ படைத்த அனைத்தையும் தெய்வத்திற்கு சமர்ப்பித்தாய் என்று சந்தோசமாய் இரு. மற்றவர்களை நான் அக்கிரமமாக நடத்தவில்லை.

அறிவுடன் வாழ விரும்பினால் உள்ளே நிற்கும் மெய்ப்பொருளைப் பார்க்க பழகிக்கொள்ளவேண்டும். ஆத்மாவை நோக்கும் ஒருவனுக்கு துணியும் மணியும் வீடும் மாளிகையும், புகழும் செல்வமும் அதிகாரமும் மற்ற நாடக வேடிக்கைகளும் தாமாகவே மறைந்து போகும். பல விசயங்களைப் பற்றிக் கவலைப்படுவதில் என்ன பயன்? ஆத்மாவுக்கு அடியனாகி நீதியும் அடக்கமும் கொண்டு வாழ்வதே பெருமை. அடக்கம் உள்ளத்தில் இருக்கவேண்டும். உள்ளமாகிய தனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சிரமத்தில் மௌனமாக இருந்து மனவலிமையை அடைய விரும்பினால் சாந்த சித்த எண்ணங்களை சேர்த்து வைத்திருக்கவேண்டும்.

மனிதனுக்கு இருக்கவேண்டிய உயர்ந்த பண்பாடு நன்றி தான். மண்ணும், தீயும், நீரும், காற்றும், வானமும் ஆகிய ஐந்துபூதங்களும் உன்னைப் படைத்துக் காத்து வருகின்றன. இந்தச் சமுதாயத்துக்கும் உலகத்துக்கும் நன்றியுள்ளவனாக கடமைகளை ஆற்ற வேண்டும். பெரிய பெரிய ஞானிகள் அரிய பல விசயங்களை எழுதி வைத்திருக்கிறார்கள். அவற்றின் அடிப்படை நோக்கமெல்லாம் இந்தப் பூமியிலே நீ இனாமாக வாழ்ந்துவிட்டுப் போகக்கூடாது என்பதுதான். இந்த நாட்டிலே பிறரது உதவியையும் ஆதரவையும் பெற்று வாழும் மனிதனே! உனக்கு நல்லது செய்தவனுக்கே தீமை செய்ய நினைக்கிறாய்.

நினைக்கின்ற மனத்தை உடையவனே மனிதன். மனிதன் என்றால் எண்ணத் தெரிந்திருக்க வேண்டும். அந்த எண்ணங்கள் எப்படி அமைந்திருக்கின்றனவோ அப்படியே அவன் வாழ்வு அமைகிறது. வெளிப்பகட்டு உதவாது. எண்ணங்கள் உள் ஒடுங்கி நின்று செயல்பட்டால் பல நன்மைகள் விளைகின்றன என்பதனை நாம் நன்கு உணர்வோம். இவ்வாறு மனம் உடைய மனிதன் மனதை ஆளத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற காரணத்தால் ''ஆள்'' என அழைக்கப்பெறுகிறான். ஆள் என்ற சொல் ''ஆட்சி செய்'' என்று பொருளுடையது. நாமெல்லாம் மனம், புத்தி, சித்தம் ஆகியவற்றை பிறரை அடக்கி ஆளுவதே இதன் உட்பொருள் என எண்ணி நமக்கும் பிறர்க்கும் இன்னலை விளைவித்து வருகிறோம். ஆளத்தெரியாமல் அடக்கிவைத்து வஞ்சனையாகவும் பொய்யாகவும் வாழ்ந்து வருகிறோம்.

காட்டிலே வாழ்வது கடினம் என்று பெரியவர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. காட்டிலே கொடுமையான மிருகங்கள் இருந்தாலும் அவைகளை அடையாளங் காண வித்தியாசமான முகங்களை ஆண்டவன் கொடுத்துவிட்டார். ஆதலால் அடையாளம் கண்டு தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் நாட்டிலே மக்களிடையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வது மிகமிகக் கடினம். ஏனெனில் மக்களாய்ப் பிறந்த அனைவருக்கும் முகத் தோற்றம் ஒரே மாதிரி படைக்கப்பட்டுவிட்டபடியால் இவர்களிலே எது நரி, எது கரடி, எது எலி என்று கண்டுகொள்ள முடியாமல் நாமே சில நேரங்களில் கரடித்தோளில் கையைப் போட்டுக்கொண்டு வீட்டிற்கு அழைத்துச் செல்கிறோம். அந்த மனிதக்கரடி ஆடாத ஆட்டமெல்லாம் ஆடிவிட்டுப் போகிறது. ஆதலால் மனிதன் என்று அளந்து பார்க்கிற கருவி குணம்தான் என்பது விளக்கமாகும். பிறருக்குப் பயன்பட்டு இயன்றவரை உதவிசெய்து கருணை என்கிற குணங்களே இல்லாமல் இருப்பவனுக்கு பெரிய அறிவு இருந்துதான் என்ன பயன்?

இனாமாகப் பெறுவது, யாசகம் பெறுவது இழிவு என்ற மனோபாவம் நம்மிடையே இல்லை தன் காலிலே நிற்க முடியாது சார்ந்து நிற்கும் ஒரு சமுதாயம் நமது பரம்பரையாய்ப் போய்விட்டது. பிறரிடமிருந்து ஒரு பொருளைப் பெறுவது முறையல்ல. நம் தன்மானத்தில் தலையிடிக்கும் செயல் என்று மேல் நாடுகளில் கருதுகிறார்கள், நம் நாட்டில் இது யாயமாகப்படுகிறது. ஜப்பானில் ஒரு கடையில் இரு நெருக்கமான உறவினர்கள் பானம் அருந்தினால் அவரவர் செலவை அவரவரே செலுத்துவார்கள். எக்காரணம் கொண்டும் ஒருவர் செலவை மற்றவர் ஏற்கவும் மாட்டார், இதுதான் தன்மானம். எல்லோரும் சமநிலை. எல்லோரும் வாழவேண்டுமென்ற மனோபாவம். எமது நாடு எமக்காகக் கடும் உழைப்பு உழைக்கிறோம் என்ற சிந்தனை. களவு கிடையாது.

தமிழின நிலைமை இன்று அடைந்த நிலைமைக்கு முகம் பார்த்து வாழ்ந்த நிலையே காரணம். ஒரு சமுதாயம் முன்னுக்கு வருவது அதிலுள்ள தனி மனிதர்களின் ஆர்வத்தினாலும், முயற்சியினாலும், செயல்களினாலும்தான். அரசாங்கத்தினால் ஒரு சமுதாயம் வளம்கொளிக்கும் நாடாக மாறியது என்று நடந்ததில்லை.

தனி மனித ஆர்வம் தனி மனித துடிப்பு முயற்சி, தொழில் கற்பனை, தனிமனிதன் மேற்கொள்ளும் தியாகம் உழைப்பு இவற்றிலிருந்துதான் ஒவ்வொரு துறையிலும் சாதனைகள் மலர்ந்திருக்கின்றன. எந்த ஒரு நிறுவனமும் சீரும் சிறப்பும் பெறுவது அங்குள்ள மக்களின் தரமும் அவர்கள் காட்டும் தன்மை, தைரியம், கற்பனை, விடாமுயற்சி இவைகளைப் பொறுத்தது, ஒரு நிறுவனத்தில் உள்ள மனிதர்கள்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல்வியை வெற்றியாக மாற்றுகிறார்கள், புதிய பொருட்களையும் புதிய துறைகளையும் உருவாக்குகிறார்கள். ஆகவே தான் எந்தத் துறையானாலும்சரி ஒரு நல்லெண்ணம் படைத்த தலைவனும் திறமை மிகுந்த நிர்வாகப் படையும் தொழில் நிர்வாகத்தில் ஈடுபடுமானால் நம் நாட்டை ஜப்பானைப் போல் சிங்கப்பூரைப்போல் மாற்றிவிட முடியும், தனி மனிதர்கள் முன்னேறும்போதுதான் சமுதாயம் முன்னேறுகிறது. ஆகவே நாம் தனி மனிதர்களை சுதந்திரமாகச் செயல்பட ஊக்குவிக்க வேண்டும். நம்மால் முடியும், நான் முயல் வேன் என்ற துடிப்பு நமக்கு வேண்டும். அதுதான் தொழில் வளத்திற்கு முதல்படி.

விமானங்களில் வானிலே பறக்கக் கற்ற மக்கள், கடலில் நீந்தக் கற்ற மக்கள், நிலத்தில் அமைதியாக வாழ முடியவில்லை. படுக்கையில் படுத்தவுடன் உறங்கவும் முடியவில்லை. எல்லாம் வேண்டும் என்ற பண்பு ஒட்டிக்கொண்டிருக்கும் வரை மனிதன் அமைதியைக் காணமாட்டான்.

மனிதன் கப்பலில் ஏறிக் கடலைக் கடக்கலாம். ஆனால் நடுக்கடலிலே புயற்காற்று கப்பலைச் சுக்குநூறாக்கி விடுகிறது பாகிஸ்தான் ஜனாதிபதி "ஜியாவுல்கக்" விமானத்தில் சென்று கொண்டிருக்கையில் நடுவானில் விமானம் சுக்குநூறாகி அடையாளமின்றி மறைந்துள்ளார். மனிதன் இதைக் கொஞ்சமாவது சிந்தித்துப் பார்க்கவேண்டும். உண்மை என்ற ஒன்றுக்கு அஞ்சி வாழவேண்டும். மனிதனுடைய எண்ணத்துக்கும் நோக்கத்துக்கும் தக்கபடியே அவனுக்கு சன்மானம் கிடைக்கிறது. துன்பம் எல்லாம் பிறருக்குத் துன்பம் செய்தாரிடம் செல்லும். துன்பம் இல்லாமையை விரும்புவோர் பிறருக்குத் துன்பம் செய்யார்.

இறைவனை வழிபடும் வகையிலும் மூர்த்தி பேதங்களிலும் கலக்கம் அடையாமல் ஓரே ஈசனை எல்லோரும் பலவித மூர்த்திகளாகக் கொண்டு வழிபடுகிறார்கள் ன்னற பேருண்மையை நன்றாக உணரவேண்டும். இந்தப் பேருண்மையை உணர்ந்து உள்ளம் பரிபாகம் அடைந்தால் பின்னர் எந்தத் தெய்வமும் எந்த விக்கிரகமும் அவனே ஆகும். பல தெய்வங்கள் இருப்பதாகப் பேசிக்கொள்ளுதல் அறிவீனத்தின் விளைவு. அண்ட கோடிகள் அனைத்துக்கும் மூலப்பொருளாயிருக்கும் தெய்வம் உண்மைப்பொருள் ஒன்றே ஒன்றுதான்.

கடவுளின் பெயரால் பொய்வேசக்காரனாய் இருப்பதைவிட நாஸ்திகன் என்று சொல்லிக்கொள்வது நன்று. பண்டைக்கால ஞானிகள் அனுபவத்தில் உண்மையை அறிந்திருந்தார்கள் என்றால் இக்கால மனிதனும் அதை அனுபவத்தில் பெற்றுத்தான் ஆகவேண்டும். ஏதோ சில கொள்கைகளையும் கருத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் காட்டி அவர்களைத் திருப்திப்படுத்திவிடலாம் என்று எண்ணுவது அறிவுடைமையாகாது. மதத்தைப்பற்றியும் ஆண்டவனைப் பற்றியும் வீணில் பேசிக்கொண்டிருப்பதில் பிரயோசனம் எதுவும் இல்லை. இவற்றின் உட்பொருளை ஒவ்வொருவரும் உணரவேண்டும். சுய அனுபவத்தில் உண்மையை உணராதவன் மதவாதி அல்லன். அடிப்படைத் தத்துவ உண்மைகளை ஒருவன் என்றைக்கு ஞானக் கண்ணால் காண்கிறானோ அத்தத்துவங்களின் சொரூபமாக மானிட வாழ்க்கை அமைந்திருக்கிறது என்னும் அனுபவத்தை என்றைக்குப் பெறுகிறானோ அன்றுதான் அவன் மதத்தின் உண்மைப் பொருளை உணர்ந்தவன்.

புத்தகத்தைப் படிக்கத்தெரியாதவன் புத்தகத்தில் இருக்கும் உண்மையை உணர்ந்திருப்பானானால் அவன் தத்துவ ஞானியைவிடச் சிறந்தவன். ஆத்ம அனுபவத்தைப் பெறுவது மனிதனது இலட்சியமாய் இருக்கவேண்டும். கோயில்களுக்கு போவதாலும் நூல்களைப் படிப்பதினாலும் மெய்ஞானம் பெறலாம் என்று எண்ணி வாழ்நாள் முழுவதையும் அத்தகைய முயற்சிகளில் செலவு செய்யலாம். ஆனால் சமயத்தின் சாராம்சமான உள்ளத் தூய்மையையும் அந்த உண்மையின்றி ஓரணுவும் அசையாது என்ற அசைக்க முடியாத பக்தியையும் நாம் பெறாவிடில் கடவுளை (உண்மைப் பொருள்) தேடும் முயற்சி வீணானதாகும்.

சத்துவகுண பக்தி வாய்க்கப்பெற்றவன், தனது ஆத்ம சாதனங்களை பிறருக்குக் காட்டிக்கொள்வதில்லை. ஆடம்பர வாழ்க்கை அவனிடத்தில் இல்லை. சாத்துவிக உணவை மட்டும் அருந்துகிறான். ஈசுவர சிந்தனையைத் தவிர வேறு எதிலும் தன் மனத்தைச் செலுத்த மாட்டான். நிஷ்காமிய கருமம் புரிவதன் விளைவாகச் சித்தசுத்தி உண்டாகிய பின்பே சத்துவகுணம் வருகிறது. சத்துவகுணம் நிறைந்தவர் விளம்பரம் செய்யாது தங்கள் சாதனைகளைச் செய்கின்றனர்.

இன்று வாழ்வில் இயற்கையைப் பெரிய அளவுக்கு வென்றுவிட்டோம். உலகத்தின் ஒரு கோடியிலிருந்து இன்னொரு கோடிக்கு சிலமணி நேரங்களில் செல்ல முடிகிறது. இன்றும் பெருமைக்குரிய பல சாதனைகள் புரிந்துள்ளோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் வசதிகள் பெருகிய அளவுக்கு உள்ளத்திலே உயர்ந்த பண்புகள் ஓங்கிவளரவில்லை. அன்புக்கும், பரிவுக்கும், உண்மைக்கும் மனித சமுதாயத்திலே இடம் இல்லாமல் இருக்கின்றது. ஆகாயத்துக்கு அப்பாலும் செல்லக் கற்றுக்கொண்ட மனிதன் தன் உள்ளத்திலே அவ்வாறான விரிவை அடையவே இல்லை. மக்கள் மத்தியிலே அச்சமும் அவநம்பிக்கையும் உண்மையை பேசாத காரணத்தினால் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே போகின்றன. இன்னும் ஒரு சாரார் இவ்வுலகம் இன்பம் தரக்கூடியதாய் இருக்கிறது. செத்தபின் சிவலோகம், வைகுண்டம் என்று பேசுவது பைத்தியக்காரத்தனம். சுகபோகத்தை புறக்கணித்து கண்ணால் காணாத ஒன்றுக்கு நாம் ஏன் பாடுபட வேண்டும் என்று கேட்கிறார்கள். பிரபஞ்ச நடைமுறை அறிந்துகொள்ளும் ஞானம் வாய்க்கப்பெறும்பொழுது சம்சார மரம் சரிந்து விழுகிறது.

ஆகமம் அல்லது சாஸ்திரப் பிரமாணம் மெய்ஞ்ஞானிகள் நேரே தம் அனுபவத்தில் கண்ட உண்மை. மெய்ஞ்ஞானி சுயநலத்தை அறவே துறந்தவன். அவன் கைம்மாறு கருதி ஞானத்தை விலைக்கு விற்கமாட்டான். அவன் வழங்கும் உண்மைகள் பழைய பேருண்மைகளுடன் ஒத்தனவாகவே இருக்கும். அவனது ஞானப்பேறு தனக்கென்று வாய்ந்ததென உரிமை பாராட்டமாட்டான். மெய்ஞ்ஞானி அனுபவத்தில் கண்ட உண்மையை ஏட்டுக்கல்வியைப் படித்தறிந்தவர்கள் ஆராய்ச்சி செய்ய முடியாது. மனம் ஐம்பொறிகளையும் கடந்து பேருணர்வுக்கு எட்டுகின்ற ஒரு பொருளையே கடவுள் (உண்மை) என்கிறோம்.

பற்றுக்களை அறவே நீக்கி அன்பினால் பணிசெய்து ஆண்டவனிடம் அடைக்கலம் புகுவதொன்றே நமது கடமை. நமக்கு என்று தனியான வேறு ஒரு காரியமும் இல்லை. உலக நடைமுறையைச் சரியாகப் பயன்படுத்துவதனாலேயே மனபரிபாகம் நம்மை வந்து அடைகிறது. மனபரிபாகம் வந்து அடைகின்றபோது மனம் பண்பட்டு விடுகிறது. பண்பட்ட மனத்திலே சுயநலத்தை மருந்துக்கும் காணமுடியாது. சுயநலம் இல்லாதபோது முத்தி வந்தடைகின்றது. கருமத்தை முறையாகச் செய்வதன்மூலம் முத்தி அடைகின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றோம் என்றுதானே கர்மயோகம் புகட்டுகின்றது. இறைவனுடைய உண்மைத் தத்துவத்தோடு நம்மை இணைப்பது என்பது யோகம். மக்களின் பக்குவத்துக்கும் தகுதிக்கும் அமைய உள்ள யோகங்கள் நான்காகும். அவை கர்மயோகம், பக்தியோகம், இராசயோகம், ஞானயோகம் எனப் பெறும். தன் கருமங்களையும் கடமைகளையும் பற்றின்றிச் செய்வதன் மூலமாக இறை உணர்வினைப் பெற்றுக்கொள்ளுதல் கர்மயோகம். பயனைக் கருதிக் கருமம் செய்பவன் ஆகிவிடாதே. வாழ்விலே உலகவிவகாரத்தை நடாத்திக் கொண்டே தன் உள்ளத்தை ஒருவன் பற்று அறச் செய்ய வேண்டும் என்பதையே கர்மயோகம் புகட்டுகின்றது.

நாயன்மார் மூவர் முதலிகள் எமது பொருட்டாக கோயில் தோறும் மூலமூர்த்திகளை வழிபடுவோர்களாய் தம்மை வழக்கப்படுத்திக் கொண்டு தோத்திர மூலம் கோயில் திருவிளக்கத்தை கோயிலில் திகழ வைத்தார்கள். இதனை நாம் நம் சமயப்பெருமையாக அற்புதம் என அழைத்து வீணே காலத்தை கழிக்கிறோம் அன்றி அதன் அடிச்சுவடு அணுகும் அறம் செய்ய விருபுகிறோமில்லை. என்னே நம் விந்தை வாழ்வு.

இக்காலததில் அறங்காவலர் குழுவாயும், குருவாகவும் இருப்பவர்களோ சமய மொழித் திறனற்றவர்களாய் ஆகம நூற் பொருள் விளங்கியும் விளங்காமலும் ஏதோ ஒரு வகையாகக் கோயிலைக் காக்கின்றார்கள். அக்காத்தலில் கற்றவளவிற்கு குறை குற்றம் பொருந்ததபடி தன்னைக் காக்குமளவிற்கு கடமை புரியாது கையிற்பணத்திற்கு காதலாகி நிற்கின்றார்களே. இவர்களாலே கோயில் தேவையில்லாத தொன்று; ஒரு சிறிய மனிதர் கூட்டத்தின் வாழ்விற்குரிய முயற்சி என்று பண்டைய தமிழ்ப் பண்பாட்டின் தோற்றத்துக்கு வீழ்வு ஏற்படுவதை உணராமல் இருக்க முடியுமா? ''புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா நின் அடி என் மனத்தே வழுவாது இருக்க வரந்தரல் வேண்டும்'' என்று இம் மண்ணுலகத்தில் எதிர்பார்த்த அன்றைய தெய்வக் குரல் இன்று எங்கே?

''நின் அடி என்மனத்தே வழுவாதிருக்க வரம் தரல் வேண்டும்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நின் அடி" முதலும் அடியும் காண முடியாத உண்மைப் பொருளின் பாதரம், எனது மனதில் மாறா திருக்க வேண்டும் என வேண்டுகிறார். அதாவது உண்மை மாறக்கூடாது. ஆனால் இன்று கோயில்களில் பிரதான வைபவங்களில் தெட்சணை என்று பலமுறை கேட்கிறார் கள். இவை சகலரிடமும் ஒரே மாதிரி அமைவதில்லை. ஆத லால் இம்முறை உண்மைக்கு மாறுபட்டவை ஆதலால் உண்மையே இறைவன் என்பதை உணரமுடிவதில்லை.

சகல துறைகளிலும் அரசியல் மேவி நிற்கின்றமையால் உயர்வு தாழ்வு மனப்பான்மைகள் வளர்ந்து வருகின்றன. மேற்கிலிருந்து வந்த நாகரீகம் சிக்கலையும் பிரச்சனை களையும் உருவாக்கி ஓர் இனம் மறு இனத்தை அழித்து தலைதூக்கமுயலும் காட்டுமிராண்டி எண்ணங்கள் வளர்ந்து விட்டன. நமது சமய வரலாறுகள், தலைவர்களின் முது மொழிகள் யாவற்றையும் மறந்து தந்திரோபாயங்களைப் பயன்படுத்தி தமது சொந்தச் சகோதரங்களையே அழிக்கத் துணிகிறார்கள். சமயத்தலைவர்கள், ஞானிகள் சிந்தனைகள் புறக்கணிக்கப்பட்டு விட்டன. நாமும் மேற்கு நாடுகளை நாடி ஓடுகின்றோம். எமது பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ள எமக்கு உறுதி இல்லை. நம்மை நாமே அழித்துக் கொள்ள ஏன் ஐயா மேற்கு நோக்கி ஓடவேண்டும்? நமக் குள்ள சிந்தனைப் பலத்தால் ஆன்ம ஞானத்தால் சிக்கல் களை அறுத்து, சகோதரத்துவத்தை உருவாக்க முடியாதா? அப்படியானால் ஞானிகள், அறிஞர்களின் சிந்தனைகள், நூல்கள், மதபீடங்கள், கோயில்கள் எல்லாம் எதற்காக.

யதார்த்தவாதி வெகுஜனவிரோதி முற்றிலும் உண்மை. எவராவது உண்மையினின்றும் வழுவாமல் நடந்து பார்த்த பின் சொல்லுங்கள். உண்மையைப் பேசும்போதே மற்றவர் களின் விரோதத்தைச் சம்பாதித்துக்கொள்கிறார். எவரும் உண்மை பேசுவதால் கூடுதல் இலாபம் பெற முடியாதென் பதால் உண்மைக்கு வருவது கஷ்டம். ஆனால் இலட்சி யத்தை எண்ணி ஒருசிலர் மட்டும் உண்மையை அனுஷ் டிக்க வேண்டுமென விரும்பலாம். அப்படியானோர் மிகமிகக் குறைவு. அவருக்கு வெகுஜன விரோதம் சொல்லாமல் கொள்ளாமல் வந்துவிடும். தவறான பொய் யாயின் அவரது செயல்களில், தொழில்களில் கருமங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

K. Ponniah
PRINCIPAL

தருமங்களில் அவரது நோக்கம் புலப்படவே செய்யும். 55 வயதின் முன் இதற்குரிய சரியான உட்பொருள் உற்பத்தியாக முடியாது. தெய்வப் புலவர்கள் வள்ளுவர், ஒளவையார் நக்கீரர், கம்பர், நாயன்மார்கள் முதலானோர் முது பருவத்தில்தான் உலகுக்கு வழிகாட்டும் நூல்களையும் நெறிகளையும் வெளியிட்டுள்ளார்களேயன்றி இளமைப் பருவத்தில் அல்ல என்பதை நாம் நன்றாக ஆராயவேண்டும். ஆகவே உலக நெறிப்பாடுகள் எல்லாம் அனுபவத்தின் வழிகளாகும் மறுபிறப்பு. சோதிடம் விதிமுறைகள் என்பன ஆரம்பகாலத்தில் அனுபவ வல்லுனர்களாலும் மன சுத்தியுள்ளவர்களாலும் உண்மைவழிப் பெற்றவர்களாலும் வகுக்கப்பெற்றுள்ளன. இவை முழுவதும் உண்மை நெறியாகும். தற்காலத்தில் உருவாக்கப்பெறும் அரசாங்கங்கள், கோவில்கள், பொதுப்பணிமன்றங்கள், நீதிஸ்தலங்கள், கல்லூரிகள், சமயப் பணிமனைகள் கிராமாட்சி சபைகள் முதலியன சகலதும் ஒரு பக்கசார்பாக (யாப்புகளை) சட்டதிட்டங்களை ஆக்கி அமுல்படுத்தி வருவதால் அவை அடிக்கடி மாற்றமடைந்தும் அழிந்தும் செயல்பட முடியாமலும் இருப்பதை அறிகிறோம். உண்மைநிலை சரியாய் விதிமுறையில் அமைந்திருக்குமானால் அவை என்றும் அழியாவரம் பெற்றிருக்கும். இந்துக்களின் சாஸ்திரங்களை இயற்றியவர் ரிஷிகள். இவர்களும் தாம் ஆத்ம சொரூபம் என்பதை தங்கள் அனுபவத்தில் கண்டார்கள். இக்காலத்திய மனிதருக்கு இந்த அனுபவங்கள் ஒருபோதும் வாய்க்காது என உரிமை கொண்டுள்ளனர். ஆதலால் மதத்தில் நம்பிக்கை வை எனப் புகட்டுகின்றனர். இது அறிவுடைமையல்ல. ஏதோ சிலருக்காவது எதிர்காலத்தில் சிரமத்துடன் அவ்வுண்மையை பெற அனுபவத்தில் வாய்க்கலாம். நிகழ்ந்த நிகழ்ச்சி திரும்பத் திரும்ப நடப்பதே இயற்கையின் நியதி. இக்காலத்திய மனிதனும் அதை அனுபூதியில் பெறறாக வேண்டும். இவைகளைப் பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை. அதன் உட்பொருளை அனுபவத்தில் யாவரும் உணரவேண்டும். கடவுளின் பெயரால் குழப்பங்கள். சண்டைகள் இருந்து அக்காரணத்தால் சிந்திய இரத்தத்திற்கு அளவில்லை. அப்படி அவர்கள் கொலை புரிந்த காரணம் மதத்தின் மூல தத்துவத்தை அறியாததேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LIBRARY Book No. SARANAVALAYA KARAVEDDY

மெய்ப் பொருள் எது என்னும் நாட்டம் கொண்ட வர்களாகவே மக்கள் இருந்துவருகின்றனர். மனிதன் அடிப் படை (தத்துவங்கள்) உண்மைகளை என்று கிரகிக்கிறானோ ஞானக்கண்கொண்டு கண்டறிகிறானோ அத்தத்துவ சொரூ பமாக மனிதவாழ்க்கை அமைந்திருக்கின்றது என்னும் அனுபவத்தைப் பெறுகிறானோ அன்றுதான் அவனுடைய ஐயங்கள் அகலுகின்றன. அஞ்ஞான இருள் நீங்குகிறது. நெடுங்காலம் கையாண்ட கோணலான கொள்கைகளும் கருத்துக்களும், நிமிர்த்தி நேர்மைப்படுத்தப் படுகின்றன. இந்த மெய்ஞானத்தைப் பெறும் வரையில் மனிதன் அமைதி அடைய முடியாது என வேதங்கள் பகர்கின்றன. ரிஷிகள் சுவானுபூதியில் கண்டறிந்தவைகளை யாவரும் பெறவேண் டுமென விரும்புகின்றனர். அவர்கள் செந்நெறியில் செல் கிறவர்கள். அதே அனுபவத்தை நாமும் பெற்றாக வேண் டும். உண்மை யாவருக்கும் ஒன்றே.

மானுட நிலையிலிருந்து தேவநிலை எய்துவதற்கு ஒரு லட்சம் ஆண்டுகள் எடுத்துக் கொள்ளலாம். தேவகணங் களில் மேலான நிலையை அடைய ஐந்து லட்சம் வருடங் கள் எடுக்கலாம், பின்பு அவன் பரிபூரண நிலையை அடைய ஐந்து கோடி வருடங்கள் எடுக்கலாம். ஆனால் அவன் தனது பரிபூரணத்தை விரைந்து நிறைவேற்றுவானாகில் கால அளவைக் குறைத்துவிட முடியும். தக்கமுயற்சி எடுத் துக் கொண்டால் அதே பரிபூரண நிலையை ஆறுமாதங் களிலோ ஆறுவருடங்களிலோ ஏன் எய்திவிடலாகாது. உல கிலே ஞானிகளும், தீர்க்கதரிசிகளும் பலர் தோன்றியுள்ள னர். அன்னவர் அனைவரும் மனிதன் பலகோடி வருடம் வாழ்ந்த வாழ்க்கையை ஒரே சீவிதத்தில் வாழ்ந்து நிறைவு பெற்றுள்ளனர். மனதை ஒருமுகப்படுத்துதல் என்பதன் பொருளே காலத்தை குறுக்குதலாம் இப்படிச் செய்வதால் மேலோர் காலத்தை வெல்கின்றனர்.

சித்தம் சிந்தனையற்றிருப்பது நிர்விதர்க்கம். அதீதத் துக்கு போவது மிக எளியது போன்று தென்படுகிறது. ஆயினும் அப்பெருநிலையை எட்டுவது மிகக் கடினம். அதா வது மனது மனதைக் குறித்தே தியானம் பண்ணவேண் டும். எந்த எண்ணமும் மனதில் தோன்றலாகாது இப்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதை ஒடுக்கவல்லவன் ஆகில் அக்கணமே முத்தி வாய்க்கிறது. மனதற்ற நிலை எய்த முதலில் மனது முற்றிலும் வசப்பட்டதாக வேண்டும். ஒடுங்கிய விருத்திகள் மறைந்திருக்கும் சமஸ்காரங்களாக சித்தத்தினுள் புதைந்து கிடக்கின்றன. இப்படி மறைந்திருக்கும் விருத்திகளை விதைகள் என்கிறோம். பூமியில் மறைந்து கிடக்கும் விதைகள் தருணம் வாய்க்கும்போது முளைக்கின்றன. வறுத்தெடுத்த விதைகள் முளைக்கமாட்டா. மனதினுள் புதையுண்டு கிடக்கும் விருத்திகள் என்னும் விதைகளும் இருக்கும்வரை ஜனன மரணங்கள் வந்துகொண்டே இருக்கும்.

ஆத்மாவானது பிரகிருதியோடும் மனதோடும் ஸ்தூல சரீரத்தோடு கலந்து கிடப்பதால் ஆத்ம தரிசனம் கிட்டுவதில்லை. சித்தம் என்னும் தடாகத்திலே ஏதேனும் ஒரு விருத்தி பாக்கியிருந்தாலும் ஆத்ம சொரூபத்தை தெரியவொட்டாது மறைக்கிறது. விருத்திகள் அனைத்தும் ஒடுங்குமுன்பு ஆத்ம சொரூபம் தெரிவதில்லை. ஏதேனும் ஒரு விருத்தி அல்லது சங்கற்பத்தை பலப்படுத்துவதால் ஏனைய விருத்திகள் அடிபட்டுப்போகின்றன. பிறகு அந்த ஒன்றையும் அடக்குவது எளிதாகிறது.

உலகில் மக்கள் மடிந்து கொண்டேயிருக்கின்றனர். ஆனால் நாம் மட்டும் மடிந்துபோக மாட்டோம் என ஒவ்வொருவரும் எண்ணி வருவது பெரிய அதிசயம். அறிவிலிகளால் சூழப்பட்டவர்களாகவே நாம் இருந்து வருகிறோம். ஆனால் நம்மில் ஒவ்வொருவரும் அறிவு மிகப் படைத்தவர்களாக எண்ணிக் கொள்ளுகிறோம். நிலைத்த அன்பும், உறுதிப்பாடும் யாரிடத்திலும் இல்லை என்பதை எங்கு திரும்பினாலும் கண்டு வருகிறோம். ஆனால் நாம் கொண்டுள்ள அன்பு உறுதியானதென்றும், நிலைத்தது என்றும் எண்ணி வருகிறோம். அன்பு உண்மையில் 'நிலைத்ததா? இல்லை. அன்பும் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டது. கணவன் மனைவியை நேசிப்பதும், மனைவி கணவனை நேசிப்பதும், பெற்றார் குழந்தைகளை நேசிப்பதும் சிறிது சிறிதாகத் தேய்ந்து இறுதியில் மறைந்து போகிறது. இதைக் கண்கூடாகக் காண்கிறோம். இவ்வுலக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையிலுள்ள ஒவ்வொன்றும் தேய்ந்து மறையக் கூடியது. இது மனிதருக்கு எளிதில் விளங்குவதில்லை. தான் பற்றிப் பிடித்திருக்கும் யாவும் கைநழுவிப் போகும்பொழுது மனிதனுக்கு திடீரென விவேகம் உதயமாகிறது. இவ்வுலகத்தில் யாவும் பொருளற்றவைகள் என்றும், வெறும் கனவு போன்றவை என்றும் விவேகம் வரும்போது அவனுக்கு விளங்குகிறது. அதைத் தொடர்ந்து வைராக்கியம் அல்லது பற்றின்மை சிறிது உண்டாகிறது. உலகில் பெருமக்கள் பலர் இருந்துள்ளனர். இந்திரிய சுகங்களையும், அனுபவங்களையும் துறக்காது அவர்களுக்கு பெருமை வாய்த்தது கிடையாது. இயற்கையில் வெவ்வேறு இயக்கங்களுக்கிடையில் முரண்பாடு உண்டாகிறது.

சத்தியத்தில் நிலைத்திருப்பவன் சொப்பனத்திலும் பொய் சொல்லான். மனம், மொழி, மெய் ஆகியவைகளும் உண்மைக்கு ஒத்தவைகளாகும். அப்படிச் சத்தியத்தில் நிலைபெற்றவன் சொல்லுவது சத்தியமாய் அமையும். ஆசீர்வதிக்கப்படுவாயாக என்று அவன் பகருவது அடையப் பெறுவதாகிறது. நோயாளியின் நோயும் விரைவில் குணமடைகிறது. பிறரிடமிருந்து கொடையை ஏற்றுக்கொள்ளும்பொழுது பிறருடைய தீமைகளையும் ஏற்றுக்கொள்ளுகிறான். ஏலாதிருந்து பழகுவதால் மனது பூர்வசென்ம ஞாபகத்தைப் பெறுகிறது.

எங்கெல்லாம் உயிர் இயங்குகிறதோ அங்கு அகண்ட சக்தி ஆதாரமாய் உள்ளது. உயிரானது ஓர் அற்பக் காளானாக வாழ்வைத் துவங்குகிறது. பின்பு வாழ்வுக்குரிய வலுவை ஏற்று வருகிறது. மிக மெதுவாகவும் ஓய்வின்றியும் அக்காளான் தன் வடிவத்தை மாற்றியமைத்து வருகிறது. நெடுநாளின் பின் செடியாகப் பரிணமிக்கிறது. பிறகு விலங்காகப் பரிணமிக்கிறது. அதன் பிறகு மனிதனாக மாறியமைகிறது. இறுதியில் பரம்பொருளில் ஒன்றித்து விடுகிறது.

உலகிலே மதாசிரியர்கள், தீர்க்கதரிசிகள் மானுட வர்க்கம் பலகோடி வருடங்களில் வாழும் வாழ்க்கையை ஒரே ஜீவிதத்தில் வாழ்ந்து முடித்து விட்டனர். கொண்டுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லட்சியத்தைத் தவிர வேறு எதனிடத்தும் தங்கள் மனது பிளவுபட்டுப்போக அவர்கள் இடம் தருவதில்லை. லட்சிசியத்தில் கண்ணாயிருப்பதால் கல்பகாலத்தில் அடையும் நிலையை கணப்பொழுதில் அடையக் கூடியவர்களாக ஆகின்றனர். மறுமை என்பது எங்கேயோ எட்ட இருக்கும் உலகம் அன்று. இங்கு நமக்கிடையில் லட்சக்கணக்கான அத்தகைய ஆத்மாக்கள் உலவிக் கொண்டிருக்கலாம். மாறுபட்ட சலன நிலையில் இருப்பதால் அவர்களை நாம் காணமுடியாது. பிராணன் நம்மிடத்து ஒரு விதத்தில் சலனமாய்க் கொண்டிருக்கிறது. இதேவித சலனமாய்க் கொண்டிருக்கிற உயிர்கள் ஒன்றை ஒன்று பார்க்கவும் தொடர்பு வைக்கவும் முடியும். ஆனால் பிராணனுடைய சலனம் உயர்ந்த நிலைக்கு வேறு சில உயிர்களிடம் அமைந்து விடுமாயின் அவைகளை நாம் காணமுடியாது. அவை எம்மைக் காணமாட்டா. பிராண சலனம் மாறுபட்ட உயிர்களுக்கிடையில் எந்தவித தொடர்பும் உண்டாவதில்லை.

மிகைப்பட்ட சலனத்தோடு கூடிய வெளிச்சத்தை நம் கண் பார்க்க இயலாது. சலனம் குறைந்ததாகிலும் நம் கண்ணில் தெரிவதில்லை. அப்படிக் குறைந்த சலனத்தை பூனை, ஆந்தை போன்ற உயிர்கள் காணவல்லனவாய் இருக்கின்றன. அழுத்தம் நிறைந்த கடலின் அடிப்பாகத்தில் வாழும் உயிர்கள் மேல்பாகத்துக்கு வருவதில்லை. அப்படி வந்தால் அவை துகள்துகளாக வெடித்துப்போகும்.

ஒவ்வொரு படித்தரத்திலுள்ள சலனங்களை ஒரு ஞான பூமி என்று சொல்லலாம். இப்படி பல ஞான பூமிகள் இருக்கின்றன. ஒரு படித்தர சலனமுள்ளதை ஓர் உலகம் என்றும், இன்னொரு படித்தர சலனமுள்ளதை வேறோர் உலகம் என்றும் பிரித்து வைக்கலாம். ஒரு உலகத்திலுள்ளவர்களின் ஆற்றலை வேறோர் உலக மக்கள் அறிந்து கொள்ள இயலாது. வேறு ஞான பூமிக்குரிய புதிய பிராண சலனத்தை நம்மிடத்து வரவழைத்துக் கொள்ளும்பொழுது அதற்குரிய ஞானபூமியை ஞான திருஷ்டியால் பார்க்கும் வல்லமை நமக்கு அமைகிறது. அவ்வுயிர்களுக்கும் நமக்குமுள்ள வித்தியாசம் சலன வேற்றுமையில் மட்டுமே உள்ளது. விரைந்த பிராணசலனத்துக்குரிய உலகம் அவனுக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி கொடுக்கும். உயர்ந்ததும், விரைந்ததுமான பிராண சலன நிலையை சமாதிநிலை என யோக சாத்திரம் புகட்டுகிறது. சமாதியில் படித்தரங்கள் பலவுண்டு. எல்லாவற்றிலும் உயர்ந்த சமாதி நிலையில் மெய்ப்பொருளை உள்ளவாறு நாம் தரிசிக்கிறோம். ஆதிமூலமாகிய பரவஸ்துவை நாம் அறிந்து கொண்டால் அனைத்தையும் அறிந்து கொண்டவர்களாகிறோம்.

மனிதன் ஆத்மசொரூபமென்றும்; அதில் பல மகிமைகள் நிறைந்துள்ளன என்று கூறப்படுகிறது. அதேவேளை கர்மத்தின் கொடுமைக்கு உட்பட்டிருக்கிறான். தீவினைகள் ஆத்மாவின் மகிமைகளை மறைக்கின்றன. நல்வினைகள் தடைகளை நீக்குகின்றன.

வேதத்தில் நம்பிக்கை வைக்கின்ற மனிதன் இம்மண்ணுலகில் சிலரேயாம். வேதப் பெயரில் வாழும் சுயநலப் பித்தர்களை ஏராளமாக எக்காலத்திலும் காணலாம். வேதம் இடுகின்ற ஆணைகளுள் மிகப் பெரியது தியாகத்தாலே அமிர்தத்துவம் அடைகிறது என்பதாகும்.

வேதம் ஆகமம் சன்மார்க்கம் ஆசியவைகளின் பிரமாணம் என்று சொல்லிக்கொண்டு தன் சுயநலத்தையே நிலைநாட்டுகிறான். இம்மையில் நலம் அடையாத ஒருவன், உயிர்களுக்கு அன்பு காட்டாத ஒருவன் மறுமையிலும் எந்த மேன்மையும் அடையப்போவதில்லை.

ஒரு பிறப்புத்தான் உண்டு என்பது ஏகசன்ம வாதம். முத்தி அடையும் வரை பல பிறவிகள் உண்டு என்பது புனர்சன்ம வாதம். யூதம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஏக சன்ம வாதம். மற்றைய மதங்கள் பல பிறவி வாதம். ஆண்டவன் ஒரு பிறவியைத்தான் தருகிறார் என்பது யுக்திக்குப் பொருந்தாது. மனிதனை அறிவிலும், ஆற்றலிலும் ஏற்றத்தாழ்வாக ஏன் படைக்க வேண்டும்.

ஆன்மா பக்குவமடைய ஒரு சென்மம் போதாது. பள்ளியில் பாடம் படிக்க பல வகுப்புக்கள் வேண்டும். ஆத்மா பக்குவம் ஆவதற்கு பல சென்மங்கள் எடுத்துக் கொள்ளுகிறது. ஒரு சென்மத்தில் அடைந்த பரிபக்குவத்தை ஒட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறு சென்மம் வருகிறது. பழைய பிறவிகளை மறக்கடிப்பதற்கே புதிய பிறவிகள் வருகின்றன. அவைகளை ஞாபகத்துக்கு கொண்டு வந்தால் பெரும் சுமையாகும்; துன்பமும் அதிகரிக்கும். ஆகவே பழைய அனுபவம் மட்டும் மனதில் நின்று விடுகிறது. மற்றவை ஞாபகத்திலிருந்து மறைந்து விடுகிறது. ஆகவே ஒரு பிறவி என்பது அர்த்தமற்றது.

உலகில் நரகம் என்றும், சுவர்க்கம் என்றும் வெவ்வேறு இடங்கள் இல்லை. ஒரே உலகம் அவரவர் மனப்பான்மைக்கேற்ப சுவர்க்கமாகவோ, நரகமாகவோ காட்சி தருகிறது. புத்திரப்பேறு இவ்வுலக சம்மந்தமானது. புத்திரப் பேறினால் இன்புற்றிருப்பாரையும், துன்புற்றிருப்பாரையும் காணலாம். இவ்வுலகப் பற்றை நீக்குமளவு ஒருவன் பரம்பொருளிடத்து விரைந்து போகிறான். யாவற்றையும் தியாகம் செய்வதாலே அமிர்தத்துவம் அடைகிறான்.

சீவனுக்கு அமைந்த வினைப்பயன் கிரகங்களால் உண்டானதல்ல. அவனுடைய வினைப்பயனுக்கும் கிரகங்களால் உண்டாகும் பலனுக்கும் தொடர்பு இயல்பாய் ஏற்படுகிறது. கிரகபலன் என்பதும் பிராரப்த கர்மம் என்பதும் ஒன்றாகிறது. எந்த சீவன் எத்தகைய கர்ம பலனை அனுபவிக்கத் தகுதியுடையவனாகிறானோ அந்த கிரகபலன் அமைகின்ற வேளையில் அவன் பிறப்பெடுக்கிறான். ஒவ்வொரு மனிதனும் சோதிடத்தில் வைக்கும் கருத்தைவிட முயற்சியிலும் ஈசுவர அனுக்கிரகத்திலும் நம்பிக்கை வைப்பது அவசியம். எறும்புகள் கூட்டமாய் போவதால் மழை வருவதில்லை. வரும் மழைக்கு அறிகுறியாக அது அமைகிறது. அதை உணர்ந்த எறும்புகள் பாதுகாப்புக்காக அப்படிப் போகின்றன. மனிதனுடைய வாழ்க்கை முறையை மாற்றும் வல்லமை கிரகங்களுக்கு இல்லை. தன் முயற்சியால்தான் தன் வினையை மாற்றிக்கொள்கிறான்.

---

இரவு நேரத்தில் ஆகாயத்தில் நட்சத்திரங்களைக் காண்கிறோம். பகலில் அவை தெரிவதில்லை. அதனால் வானில் நட்சத்திரங்கள் இல்லை என்று சொல்லலாமா? அஞ்ஞானத்தினால் உன்னால் இறைவனைக் காண முடியவில்லை என்றால் இதற்காக இறைவனை இல்லை என்று சொல்ல முடியுமா?

— இராமகிருஷ்ண பரமஹம்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ—

# சக்தி

அறிவு கல்வி மூலம் வளர்வது. பாடசாலையிலும், பல்கலைக் கழகத்திலும் பயில்வதால் மட்டும்தான் கல்வி அறிவு பெறலாம் என்பதில்லை. பள்ளிப் படிப்பால் மட்டும் ஒருவருக்குத் திறமை வருவதில்லை. விடாமுயற்சியாலும் தன்னம்பிக்கையாலும் திறமையை வளர்க்கலாம். அனுபவத்தால் அதனை மேலும் வளர்க்கலாம். அறிவும், திறமையும் எல்லோருக்கும் வாய்த்துவிடும் என்பதல்ல. அவை இயற்கை வழங்கும் வரங்கள், ஆண்டவன் அருளும் வரம். பல்கலைக் கழகம் செல்லாது சொந்த முயற்சியால் அறிவொளியாகத் திகழ்பவர் பலர். உண்மையான அறிவும் திறமையும் உள்ளவர்களைக் கௌரவிக்கும் பண்பு எம் மத்தியில் வளர வேண்டும்.

சுவாமி சிவானந்த கடைசிப் பிறந்த தின அறிவுரை :- "முதலில் கடவுள், அப்புறம் உலகம், கடைசியாகவே நீ." புறத்தில் மட்டும் கடவுளைத் தேடினால் போதாது என்று எமது நுண்ணறிவானது எமக்குப் புகட்டுகின்றது. நுண்ணறிவானது காலத்திற்கு உட்பட்டதன்று. கடவுளை எல்லாவற்றிற்கும் மேலான சக்தி என உணர்பவர்களிடம் தமக்குரிய கடவுள் என்ற கருத்து இராது. கடவுளைப் பற்றிய இயல்புகளை மனிதனே கற்பனை செய்வதினால்தான் ஒரே கடவுளை அதன் பல இயல்புகளிற்காக பல கோயில் வாசற்படிகளில் ஏறியிறங்குகிறான். முதலில் (உண்மையை) கடவுளை வெறும் சமயமாகவும், கொள்கைகளாகவும், கோட்பாடுகளாகவும் கொண்ட தப்பான கருத்துக்களை மனிதன் களைய வேண்டும்.

உண்மையானது குறிப்பிட்ட ஸ்தானத்திற்கோ மதத்திற்கோ உரியதன்று. பிரபஞ்சத்தை அளவிடவியலாது. அதைப் படைத்தவன் எந்த ஒரு உருவத்துக்கும் அப்பாற்பட்டவனாகவே இருக்க வேண்டும். அப்படிப்பட்டவனைச் சக்தி என்று அழைக்க விரும்பினால் அச்சக்தியானது எந்த ஓர் உருவத்திற்கும் அப்பாற்பட்ட அளவிட முடியாத சக்தியாகவே இருக்க வேண்டும். அறியாமை மன்னிக்கக் கூடியது. ஆனால் அறியாமையை உடையவர்களாக இருக்க விரும்பும் அவர்களது மனத்திடத்தை மன்னிக்க இயலாது. அளவிட முடியாத சக்தியைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதனைக் குழாயில் போட்டு ஆய்வு கூடத்தில் பரிசோதனை செய்ய முடியாது. அவர்கள் உண்மையைத் தேடி அண்டவெளிக்குக் செல்ல வேண்டியதில்லை. பதிலுக்குத் தத்தமது அகங்களுக்குள் ஊடுருவிச் செல்ல வேண்டும். நுண்ணறிவு ஒன்றினால் மட்டுமே இது முடியும்.

இலத்திரன்களின் சுழற்சியால் எழுந்த சக்தியே இன்று நாம் காணும் சகல உருவமுடைய பொருள்களின் அடிப்படை. இதிலிருந்து கடவுள் அனைத்திலும் சக்தி வடிவமாய் உள்ளான் என்ற உண்மை எமக்குப் புலப்படுத்தப் படுகிறது. சிவமானது எந்த மதத்திற்கோ மனிதர்களுக்கோ சொந்தமான தனியுரிமைக் கடவுளன்று. நாம் எப்பொழுதும் உண்மைக்கு அண்மையிலும், அதனுள்ளும் இருக்கின்றோம். பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் நுண்ணறிவு படைத்த அக ஒளியைக் கண்ட ஞானிகளால் உரைக்கப்பெற்ற உண்மை இன்றுதான் விஞ்ஞானிகளால் நிறுவப்பெறுகின்றது. மனத்தைக் கடந்து உள்ளே சென்றால் இருள் அகலும். உண்மை துலங்கும் என்பதைக் காட்டவே கடவுள் என்ற சொற்பதம் உபயோகத்தில் வந்தது என்பதை நாம் உணரவேண்டும். உண்மையே தொடக்கமும் முடிவும் அற்றது. இந்த உண்மையை, உள் ஒளியின் மகத்துவத்தை உணர்த்தவே கோயில்களில் கற்பூரம், மெழுகுவர்த்தி, தீபங்கள் உபயோகிக்கப் பெறுகின்றன. இவற்றை எல்லாம் வெளியில் காட்டப்பெறும் ஒளியாகக் கருதி அகத்தில் இருளைத் தாராளமாகத் தேக்கி வைத்துக்கொண்டு புறவாழ்வில் மயங்கி பகட்டை விரும்பி வெறும் கற்பனைகளையும், கோட்பாடுகளையும் கூறிக் கொண்டு அகந்தையுடன் மனிதன் தன் பொன்னான காலத்தைக் கழித்துக்கொண்டு குதூகலிக்கிறான். அக ஒளியைத்தான் கோயில்களில் புற ஒளியாய்க் காட்டுகிறார்கள் என்ற உண்மையை மனிதன் உணர மறுக்கிறான். அகத்திலுள்ள ஒளியை எமது அகத்தினுள் நிறைந்திருக்கும் அறியாமை என்னும் இருள் மறைத்துவிட்டது. தான், தனது என்ற ஆணவ இருள் மனிதனைக் குருடனாக்கி விட்டது. நியாய உணர்வு, தர்ம சிந்தனையுடன் பிறந்தால்தான் நாடு உய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கீதை அமுத ரசம்

'ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு.'

பாண்டவர்கள் தம் உரிமையைத் தரவேண்டுமென்று கேட்கிறார்கள். கௌரவர்கள் மறுத்துவிடுகிறார்கள். கண்ண பிரானைத் தூது அனுப்புகிறார்கள். எமக்கு வரவேண்டிய தைக் கேட்டு, மறுத்தால் 5 வீடுகளாவது கேள் அதையும் மறுத்தால் போர் முரசு கொட்டி வருவாயாக.

கண்ணன் துரியோதனனிடம் தர்மத்தைச் சொல்லி பல வழிகளாலும் கேட்கிறார். ஒன்றும் தரமுடியாது என்று கையை விரிக்கிறான் துரியோதனன்.

போர் முரசின் பேரொலி கேட்கிறது. அர்ச்சுனன் தனக்கு எதிர்ப் பக்கத்திலுள்ள பகைவர்களைப் பார்க்கிறான். அவர்கள் அனைவரும் உறவினர்கள். அம்பையும், வில்லையும் அரங்கத்திலே எறிகிறான் அர்ச்சுனன். இவர்களைக் கொன்று குவிப்பதா? என மனம் கலங்குகின்றான்.

போர் புரிவதா? விடுவதா? எது கடமை என்று தடுமாறுகிறான் அர்ச்சுனன். அறிவு பண்படாததால் அவனது அறிவை மனம் பின்னுக்கு இழுத்துவிட்டது.

அறிவு பண்படாதபோது சுவதர்மம் தெரிவதில்லை. மனம் தூய்மையாக அறிவு தூய்மையாகும்.

சுவதர்மமாவது தன்கர்மம் இருந்தபடியை அறிதல், ஒவ்வொருவரும் தமது வர்ண நிலைக்குரிய ஒழுக்கமாகிய தொழிலை அறிந்து கடைப்பிடித்தல் வேண்டும்.

கூலிவேலை செய்பவன் கீதா தத்துவத்தை அறிந்திருந்தால்தான் தன் வேலையைத் திறம்படச் செய்ய முடியும். கமத்தொழில் செய்பவன் சரி, வியாபாரியாயினும் சரி ஆசிரியனாயினும் சரி கீதா தத்துவத்தை நன்றாக அறிந்திருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனுநீதிச்சோழன் மகன் வீதியிலே தேரில் சென்ற பொழுது ஒரு பசுக்கன்று அடிபட்டு இறந்து விடுகிறது. தாய்ப்பசு மணியை அடித்து விடுகிறது. கன்று இறந்த செய்தி கேட்டு அறவழி ஆட்சி வீழ்ந்ததே என வருந்துகிறான் மன்னன். இப்பசு அனுபவிக்கும் துயரை யானும் அனுபவிப்பதே அறம் என்று கடிந்து மைந்தன்மேல் தேர் செலுத்துகிறான். மன்னவன் செய்தது தன்கருமம். சுய தருமம். அதுதான் அரச கருமம்.

ஒருவனுடைய மனதை மாற்றி அமைப்பதே துன்பத்தை நீக்குவதற்கு ஏற்ற உபாயம். அதை அறிந்தவன் கண்ணன்.

முன்பு நமது தேகம் இருக்கவில்லை. இடையில் அது வந்தது. பின்பு அது இல்லாமற் போகும். ஆக்கை அழியும் போது ஆன்மா அழிவதில்லை. ஆன்மா கொல்லுவதும் இல்லை. கொல்லப்படுவதும் இல்லை. ஆயுதங்கள் ஆன்மாவை வெட்ட மாட்டாது.

உலகத்திலே பாவம் அதிகமாகும்போது இயற்கை சீறி எழுவதால் விபரீதங்கள் விளைகின்றன. இது பிரபஞ்ச தர்மம்.

அர்ச்சுனா நீ அறப்போரிலே நிற்கின்றாய், இதுவே உன் சுய தருமம். தன் கடமையாக வந்த தர்மத்தை தக்க நேரம் செய்யாதவன் பெருங்கேடு அடைவான். வெற்றி தோல்விக ளைச் சமனாகக் கருதி போரின் பொருட்டு எழுந்திரு என உபதேசிக்கிறான் கண்ணன்.

நாம் உண்மை பேசுவது கடமை. அதனால் இன்ன பயன் விளையவேண்டும் என்று விரும்புவது மடமை. அப்பயன் விளையாதபோது உண்மை பேசாது விடுதலும். கருதிய பய னைப் பொய்பேசி அடையலாம் என்று எண்ணுவதும் தவறு. பயன் கருதாது பணி செய்பவன் சித்தம் தெளிவடையப் பெற்றவன். நாம் இயற்றுகின்ற கருமத்தை கடவுளுக்கு ஒப் படைத்துவிட வேண்டும். கடவுளின் செயல்களில் ஒரு பகுதி எம்மூலமாகவே நடந்தேறி வருவதால் நாம் கடவுளுக்கு கட மைப்பாடுடையோம்.

மனிதன் பொருள்களில் ஆசை கொள்கிறான். ஆசை கைகூடாதபொழுது சினம் அடைகிறான். சினத்தால் மனக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழப்பமும், குழப்பத்தால் நினைவின்மையும், நினைவு தவறுவதால் புத்தி நாசமும் உண்டாக இறுதியில் புத்திநாசத்தால் மனிதனே அழிந்துவிடுகிறான். ஆசையை அடிமை கொண்டவனுக்கு உலகமே அடிமையாகிறது. மனம் அடங்காதவனுக்கு ஆத்ம சிந்தனையும் இல்லை. சாந்தியும் இல்லை.

அகம்வேறு புறம்வேறு ஆக இருப்பதால் மனிதன் பிறவிக்குள்ளே ஆழ்கிறான். மனமும், வாக்கும், செயலும் ஒன்றாக இருந்தால் ஆத்மசக்தி விருத்தியாகும். இறையருள் அங்கே வந்து பதியும் இந்த நிலையில் நாம் இல்லாமையால் எண்ணங்கள், வார்த்தைகள், பார்வைகள் சிதறி வாழ்நாளே சிதறிப் போய்விடுகிறது. ஆத்மா, பரமாத்மா என்ற வேறுபாடு இருக்கும்வரை இருள் உண்டு. அறியாமை உண்டு.

கருமயோகி ஒருவன் மந்திர தீட்சை பெறவேண்டும் அல்லது குரு வாய்க்க வேண்டும் என்ற நியதியே இல்லை. அவன் அடைந்துள்ள மனநிலையே அவனுக்கு குருவாகிறது. அந்த மனநிலையே மந்திரமுமாகிறது. கருமயோகி தனது வாழ்வு அனைத்தையும் பொதுவாழ்வு ஆக்கிவிடுகிறான், அவன் பணிபுரியும்போது மனதை நடுநிலையில் வைக்கிறான். மந்திரத்தின் துணையில்லாது மனதைப் பக்குவப்படுத்துகிறான். மனம் அடங்குகிறது.

கருமம் செய்யாதிருத்தலைவிட கர்மம் செய்தல் சிறந்தது. கருமம் செய்யாத நிலையில் உடலை நடாத்தவும் முடியாது. கருமயோகத்தை சிறப்பாகக் கடைப்பிடிக்கும் ஆத்ம சாதகனிடம் பக்தி ஞானம் இடம்பெறுகிறது.

கருமம் தன்னளவில் புண்ணியமும் இல்லை. பாவமும் இல்லை. குறிக்கோளினாலேயே புண்ணிய பாபங்களை அது சென்று சேருகிறது. தன் நலனையே நாடிச் செய்யும் தேவாராதனைகூட மாசு அடைந்து பாபச் செயலாகி விடுகிறது. தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கும்போது தீயவர்களைத் தகர்த்து எறியப் புரிகின்ற வெம்போர் புண்ணியச் செயலாகி விடுகிறது.

அறிவும் ஆற்றலும் வேறு. பண்பாடு வேறு. பண்பாட்டுடன் கலவாத அறிவு வேண்டாதது. பண்பாட்டால் மட்டுமே உலகம் நிலைபெறும். தமக்கென்ற கடமையைச் செவ்வனே செய்து உயர்ந்தவர்களும் பண்புடையவர்களே. முறைப்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கின்ற கருமமே யக்ஞம் என அழைக்கப்பெறுகிறது. முறையான கருமத்தினால் நாட்டிலே மழை பெய்கிறது என்றால் அந்நாட்டிலே நல்லவர்கள் வாழ்கின்றார்கள் என்பது தெரிகிறது. இம்மைப் பயனுக்காகவாவது அவர்கள் கருமம் செய்துகொண்டிருக்கட்டும் என்ற பெருநோக்குடன் ஞானியர்கள் இகலோகத்திற்கு முன்மாதிரியாகக் கருமங்களில் ஈடுபட்டு மற்றவர்களையும் ஈடுபடுத்த வேண்டும். உயிரையே கொடுக்கவேண்டிவரினும் தன் கடமையினின்றும் பிறழாதிருப்பவனே வீரன். சுயதர்மத்தில் இறந்துபடுவதுகூட நலமாகும்.

கருமத்தின் குறிக்கோள் ஞானம் பெறுதலேயாகும். உள்ளத்தைத் தூய்மையாக்கி தெருப் பெருக்குவோனும் தேசத்தை ஆள்வோனும் செயல் புரிந்தால் ஞானத்தை அடையமுடியும். கருமயோகமும் சந்நியாசமும் ஒன்றே. உண்மைத் துறவும் பற்றற்ற கருமமும் சாதகனைப் பரம்பொருளிடத்து எடுத்து செல்வனவாகும்.

நீதி தவறிய அரசர்க்கு அறமே யமனாகும் என்பதும் மாசிலாக் கற்புடை மாதரை மண்ணுலகும் விண்ணுலகும் வணங்கும் என்பதும் தாம்செய்த ஊழின்வினை விளைந்தேயாகும் என்பதும் சிலப்பதிகாரம் போதிக்கும் பேருண்மைகளாகும்.

நல்லவர்களைக் காக்கவும், கெட்டவர்களை அழிக்கவும், தர்மத்தை நிலைநாட்டவும் யுகந்தோறும் நான் அவதரிக்கின்றேன். நாட்டிலே தர்மம் தலைகீழாகும் போது அவதார புருஷர்கள் தேர்ன்றுகிறார்கள். நாட்டிலே தோன்றும் நோயும், பஞ்சமும், துன்பமும் ஆண்டவன் அருளிய கொடை என்றே கருதவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஐந்து பூதச் செயல்களின் நுட்பங்கள் பற்றிக் கூறுகின்ற கருத்துக்களை மேற்கு நாடுகளிலே அந்நாட்டு அறிஞர்கள் ஏராளமாக எழுதிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் தமிழ் கூறும் நல்லுலகிலே இந்த ஐந்துபூத செயற்பாட்டின் நுட்பங்கள் பற்றிய கருத்துக்களை எவருமே இங்கு உருவாக்கவில்லை — என்பதால் பாரதியார் மிகவும் மனம் வருந்தியுள்ளார்.

முன்னோடியான பல கருத்துக்களைக் கொண்ட பாரதியார் சமுதாய வளர்ச்சி பற்றி எவ்வளவோ கருத்துக்களை வழங்கியுள்ளார். ஆனால் இப் பஞ்சபூத நுட்ப விளக்கங்கள் அளிக்கக்கூடிய கருத்துக்கள் தமிழில் இல்லையென கவலைப்பட்டுள்ளார். ஐந்து பூத நுட்பங்கள் பற்றிக் கூறும் அறிவு எல்லாருக்கும் ஏற்படமுடியாது. எல்லா ஆன்மாக்களுக்கும் ஐந்து பூத விகிதாசாரங்கள் வெவ்வேறு வகையான அளவினைக் கொண்டதாகவே அமைந்திருக்கும்.

எமது ~~சமுதாயத்~~ நிறுவனத்துக்குரிய **''விநாயகர் தரும நிதியம்''** என்ற சொல்லும், **''அறநெறி விஞ்ஞான மன்றம்''** என்ற சொல்லும் மாத வெளியீடான **''அறத்தமிழ் ஞானம்''** என்ற சொல்லும் ஒவ்வொரு வாக்கியத்திலும் 3—2—1 என்ற எண்களையும் காற்று, நீர், ஒளி ஆகிய பூதங்களையும், எண்ணம்—சொல்—செயல் ஆகியவற்றையும் உணர்த்தி நிற்கின்றன. **விநாயகர் — அறநெறி — அறம்** என்பன எண்ணத்தையும் **தருமம்—விஞ்ஞானம்—தமிழ்** என்பன சொல்லையும், **நிதியம், மன்றம், ஞானம்** என்பன செயல்பாட்டையும் உணர்த்துகின்றன.

**1 = தீ, 2 = நீர், 3 = காற்று.**

நிறுவனர்

---

உண்மையானது எம்மனிதனால் சொல்லப்படுகிறது என்பதை அடிப்படையாகக் கொண்டதல்ல; உண்மை தனக்குத்தானே சான்று ஆகிறது. உடல் வளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும், ஆன்ம வளர்ச்சிக்கும் சுதந்திரம் முற்றிலும் அவசியமானது.

---

ஒருவனுடைய கொள்கை எதுவாயினும் ஆகுக. அது முக்கியமானதல்ல; ஆனால் அவன் சிந்திப்பதும், சொல்லுவதும், செய்வதும் முற்றிலும் பொருந்தி ஒன்றுபட்டிருக்க வேண்டும். அப்போது அவன் ஆன்ம சக்தியுடையவன் ஆகிறான். அவன் பேசுவது நிறை மொழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைதான் இறைவன்

எத்தனை கோயில் கும்பிட்டாலும் அவரவர் செய்த நல்வினை தீவினைப்பயன் அவரவர் அடைந்தே தீரவேண்டும் என யோசிக்காமல் பிழையான வழிகளை கையாண்டுவிட்டு கடைசி நேரத்தில் சங்கரா சங்கரா என்பதில் எதுவித பிரயோசனமுமில்லை. இவர்கள் வழியைப் பின்பற்றி இவர்களது புத்திரர்களும் நடக்க முற்படுவதால் எதிர்வரும் சந்ததியார்களையும் கஷ்டத்துக்குள்ளாக்குகின்றனர். இவர்கள் ஒருகாலத்தில் எல்லாரையும் அடக்கி ஆண்டார்கள். இன்று அவரது சந்ததியினர் அடக்கி ஆளப்படுகிறார்கள். கோவிலைக் கட்டி ஆடம்பர விழாக்கள் செய்தார்களேயன்றி, உண்மைதான் இறைவன் என்பதை உணராமல் கோயில் சந்நிதானங்களிலும் சுயநலம் கருதி பொய் பேசி வந்தார்கள். பிரமா அடைந்த நிலையை அடைகிறார்கள். சீராக ஆராய்ந்து நடந்திருந்தால் இந்த அவலநிலை ஏற்பட இடமில்லை. ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதி உண்மை என்பதை உணர மறுக்கிறார்கள். அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார், அண்ணல் இருப்பிடம் ஆரும் அறிகிலர், சிவ சிவ என்கிலர் தீவினையாளர் என்பனவற்றின் சரியான உட்பொருளைத் திரும்பத் திரும்ப ஆராய்ந்து அறிய பஞ்சிப்படுகிறார்கள், எல்லாரும் உண்மை பேசி நடக்க ஆரம்பித்து விட்டால் 75 வீதமான பிரச்சினைகள் அற்றுப் போய்விடும். எல்லாரும் சமநிலை, எல்லாரும் உடலுழைப்பு, எல்லாரும் அடியார்கள். எல்லாரும் உளநலம் பெற்றவர்களாய் வாழ்க்கையில் வாழலாம்.

எங்கள் வாயிலிருந்து வரும் வார்த்தைகளின் பெலத்தை நாங்கள் அறிய முடிவதில்லை. நன்றாய் ஆராய்ந்தால் ''டே'' என்று சொன்ன ஒரு சொல் வரவர விரிந்து அதாவது மற்றவர் மடையா என்று சொல்ல அதற்குப்பதில் தடி எடுக்க, அதற்குப் பதில் கத்தி எடுக்க, அதற்குப் பதில் வாள் எடுக்க, அதற்குப் பதில் துவக்கு எடுக்க அதற்குப் பதில் செல்லடிக்க, அதற்குப்பதில் அணுகுண்டை எடுக்க எல்லாம் முடிவடைந்து விடுகிறது. டே என்று சொன்ன சொல்லுக்குள்ள சக்தியைக் கண்டு கொண்டோம். அதற்குப் பதிலாக தம்பி என்று சொன்னால் அது வரவர விரிவடைந்து அன்பு, உண்மை, நியாயம், நீதி, ஞானம் என எல்லாரும் இன்பவாழ்வு வாழ்வதைக் காணமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

J/KARANAVAI P... LIBRARY Book No. ... KARAVEDD...

| 2ഐ | 248 |
|---|---|
| வகுப்பெண் | வரவுப்பதிவெண் |

யா/கரணவாய் பொன்னம்பலவித்தியாலயம்

நூலகமும் கற்றலுக்கான வளநிலையம்

இப்புத்தகம் மேற்குறிப்பிடப்பட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ ஒப்படைக்கப்படல் வேண்டும். தவறின் தண்டப்பணம் அறவிடப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ வாணி அச்சகம்,
இலக்கணாவத்தை - உடுப்பிட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org